# வேல் ஒளி

கதிர் 3





மாணவர் மன்றம்

யா/வேலாயுதம் மகா வித்தியாலயம்

பருத்தித்துறை

# சமர்ப்பணம்



யா / வேலாயுதம் மகாவித்தியாலத்திற்கும் பழையமாணவர் சங்கத்தினருக்கும் அறிவுரைகளையும் ஆற்றுப்படுத்தல் களையும் வழங்கியதோடு மட்டுமல்லாது தமது பெறுமதிமிக்க குடும்ப சொத்துக்கள் பலவற்றை வழங்கிய பெருந்தகை 16.10.2013 அன்று மறைந்த வைத்தியநிபுணர் இராஜேந்திரம் இரவீந்திரன் அவர்களுக்கு இம்மலரை சமர்ப்பணம் செய்கின்றோம்.

கல்லூரிச்சமூகம்

# நிறுவுனர்
# பெரியார் வைரமுத்து வேலாயுதம்பிள்ளை



## நிறுவன நோக்கு (Vision)

மாறும் நவீன தொழில்நுட்ப சூழலுக்கு இயைபுடைய மாணவ சமுதாயத்தை உருவாக்குவோம்.

## பாடசாலை பணிக்கூற்று (Mission)

மாணவர்களுக்கு அடிப்படை தேர்ச்சிகளை அளித்து கல்வித்தரத்தை மேம்படுத்தி மாறும் நவீன தொழிலநுட்ப சூழலுக்கு இயைபாக்கமுடைய மாணவர் சமுதாயத்தை உரு வாக்கும் செயல் நோக்கில் சகல வளங்களையும் உத்தம மட்டத்தில் பயன்படுத்தும் நிறுவனமாகச் செயற்பட உறுதிபூணுவோம்.

**மகுட வாசகம்**

**"கல்வி அழகே அழகு"**

**யா/வேலாயுதம் மகாவித்தியாலயம்**

**பருத்தித்துறை.**

தலைப்பு

வேல்ஒளி கதிர் - 3

பதிப்பு

நவம்பர் 2013

பக்கங்கள்

80

வெளியீடு

மாணவர் மன்றம்
யா/வேலாயுதம் மகா வித்தியாலயம்
பருத்தித்துறை

அச்சுப்பதிப்பு

தீபன் பதிப்பகம்.
பிரதானவீதி.
பருத்தித்துறை.

**Title**

Veloli Kathir - 3

**Edition**

November 2013

**Published by**

Student Union
J/Velautham Maha Vidyalayam
PointPedro

**Designed & Printed by**

Theepan Offset Printer
V.M Road, Point Pedro
Tel No : 0776520315

# பாடசாலைக் கீதம்

பல்லவி

ஞானமிளிர் பாடசாலை நலம் பெறவே
புகழொடு கலையகம் வாழியவே

(ஞான)

அனுபல்லவி

அன்புடன் அறிவுமிக்க சிறந்த ஆற்றலும்
சீர்புலோலி வேலாயுதம் ஆண்கள் மகா வித்தியாலயம்

(ஞான)

சரணம்

காரணர் வேலாயுதம் சேயவர் அருணாசலம்
எனமேவு பெரியார் கல்வி அழகொளியாய்
கலையறிவே விஞ்ஞான போதமே
கவின்கலைகளும் பெற்று பலபெரு வளமொடு

(ஞான)

நெறிதரு நிலைகளும் நிலைபெறச் செய்திடும்
காளியர் கோன் காத்த சைவக்கலாசாரம்
காசினி மகிழ்ந்திட பொங்கு ஈசன் அருள்தங்கு
அருளொளியாய் அன்புருவாய் அறிவொடு நிறைந்து (ஞான)

# மாணவர் மன்றம்
# நிர்வாகசபை உறுப்பினர்கள் - 2013

**காப்பாளர்** - திரு.ச.திரவியராசா (அதிபர்)

**உபகாப்பாளர்** - திருமதி.அ.சற்குணசிங்கம்(உபஅதிபர்)

**மன்றப் பொறுப்பாசிரியர்** - திருமதி.அ.இராஜ்குமார்

**ஆசிரிய வழிப்படுத்துனர்கள் :-**

திருமதி.வ.அருளானந்தம்
திரு.வ.கருணாமூர்த்தி
செல்வி.வி.இராசரத்தினம்
திரு.கு.தெட்சணாமூர்த்தி
திரு.தா.குணசேகரம்
திரு.யோ.விதூபாகரன்

**தலைவர்** :- செல்வன்.ந.நந்தபாலன்

**உப தலைவர்** :- செல்வன்.ஆ.திவாகர்

**செயலாளர்** :- செல்வன்.ந.தனுசன்

**உப செயலாளர்** :- செல்வன்.ந.மேகரன்

**பொருளாளர்** :- செல்வன்.இ.முரளிதரன்

**பத்திராதிபர்** :- செல்வன்.சோ.நாகசாந்தன்

**உபபத்திராதிபர்** :- செல்வன்.வீ.ரஜீவன்

# கல்லூரி முதல்வர்




**திரு.ச.திரவியராசா** - B.A, P.G. Dip - in - Ed , M.Ed, S.L.P.S 2 I

GraphicPanic.com



# வலயக் கல்விப்பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி

யா/வேலாயுதம் மகா வித்தியாலயத்தின் "வேல் ஒளி" சஞ்சிகைக்கு வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன். 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற பரிசளிப்பு விழாவின் போது தனது கன்னி இதழாக வெளிவந்த "**வேல் ஒளி**" தனது மூன்றாவது இதழாக வெளிவருவது பாராட்டுக்குரியது.

சைவப்பாரம்பரியத்தையும் தமிழ்ப்பாரம்பரியத்தையும் பேணிக்காக்கின்ற இவ்வித்தியாலயம் எதிர்கால, நிகழ்கால, தேடல் வளர்ச்சிக்கு உந்துசக்தியாக இச்சஞ்சிகையை வருடாந்தம் வெளியீடு செய்து வருவதன் மூலம் ஆக்கத் திறன்மிக்க, தேடல் திறன் மிக்க மாணாக்கர்களை வளர்தெடுக்க முடியும்.

மாணவ மன்றத்தின் முயற்சியால் கையெழுத்துச் சஞ்சிகையாக வெளிவந்த இவ்விதழ் 2011 தொடக்கம் அச்சுப்பதிப்பாக வந்து இவ்வித்தி யாலயத்தின் வளர்ச்சிகளை வெளிப்படுத்தியது பாராட்டுக்குரியது. இவ்வாண்டும் இச்சஞ்சிகையின் ஊடாக பாடசாலையின் சாதனைகள். ஆக்கங்கள் வரலாற்றுத் தொகுப்பாக வெளிவந்திருப்பது இச்சஞ்சிகையின் வளர்முக உயர்விற்கு எடுத்துக்காட்டாகும்.

நவீன தொழிநுட்ப எதிர்காலத் தேடல் உலகிற்கு மாணவர்களை உள் வாங்கி அழைத்துச் செல்வதற்கு இது போன்ற ஆக்கங்கள் தொடர்ச்சியாக வெளி வர வேண்டும். இதற்கு இவ்வித்தியாலய கல்விச் சமூகம் தொடர்ந்து தனது ஆத ரவை பாடசாலைக்கு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்வதுடன் இன்றைய நன்னாளில் வேல் ஒளி சஞ்சிகைக்கு மீண்டும் எனது வாழ்த்துக்களை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

திரு.சி.நந்தகுமார்,
வலயக்கல்விப்பணிப்பாளர்,
வலயக்கல்விஅலுவலகம்,
வடமராட்சி.



# அதிபரின் பாராட்டுச்செய்தி

யா/ வேலாயுதமகாவித்தியாலயத்தின் மாணவர் மன்றத்தினால் வெளி யிடப்படும் "**வேல் ஒளி – கதிர் – 03**" சஞ்சிகைக்கு வாழ்த்துச்செய்தியை வழங்கு வதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

பாடசாலையின் தரம் உறுதிப்பாடு அடைவதற்கு மலர் வெளியீடும் அவசியமாகின்றது. மேலும் இச்சஞ்சிகையானது மாணவர்களினதும் ஆசிரியர் களினதும் ஆக்கங்களைக் கொண்டுவருவதுடன் பாடசாலையின் முக்கிய நிகழ்வுகளையும் செயற்பாடுகளையும் தன்னகத்தே கொண்டிருப்பது பாராட்டுதற்குரியது.

மேலும் இவ் "**வேல் ஒளி**" சஞ்சிகையானது சிறப்புற வளரவும் தொடர்ந்து வெளிவரவும் எனது பாராட்டுக்களையும வாழ்த்துக்களையும் தெரிவிப்பதுடன் இச்சஞ்சிகை வெளியிடுவதில் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட ஆசிரியர்கள் மற்றும் மாணவர் மன்றத்திற்கும் எனது நன்றி அறிதலை தெரிவிப்பதுடன் இச்சஞ்சிகை தொடர்ந்தும் சிறப்புற வெளிவர இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

திரு.ச.திரவியராசா
அதிபர்
யா/வேலயுதம் மகாவித்தியாலயம்



## மன்றப் பொறுப்பாசிரியரின் உள்ளத்திலிருந்து...

யா/ வேலாயுதமகாவித்தியாலய மாணவர் மன்றமானது மாணவர்களின் ஆளுமை விருத்திக்கான நிகழ்வுகளை நெறிப்படுத்துவதற்காக செயற்பட்டு வருகின்றது. இவ்வகையில் மாணவர்களினதும், ஆசிரியர்களினதும் ஆக்கங் களைத் தாங்கி "வேல் ஒளி" கதிர் - 03 புதுப்பொலிவுடன் வெளிவருவதையிட்டு பெரு மகிழ்வு கொள்கின்றேன்.

இச்சஞ்சிகை வெளியீடு பாடசாலை மாணவரிடையே இலைமறைகாயாக மறைந்திருக்கும் திறன்களை வெளிக்கொணரும் பணியினைச் செய்கின்றது. மாணவர்களின் தேடலுக்கான களமாக இச்சஞ்சிகை வெளிவருவதில் பெரு மகிழ்வடைகின்றேன்.

இவ்வகையில், இவ்வருட மலர் வெளியீட்டிற்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்த அன்புள்ளங்களுக்கு நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்வதுடன் ஒவ்வொருவரும் இச்சஞ்சிகைமூலம் பயன்பெறவேண்டும் என வாழ்த்தி எதிர்வரும் காலங்களில் "வேல் ஒளி" சிறப்புடன் வெளிவர இறையாட்சியினை இறைஞ்சி நிறைவுசெய்கின்றேன்.

திருமதி. அனற் ராஜ்குமார்,
மன்றப் பொறுப்பாசிரியர்
யா/வேலாயுதம் மகாவித்தியாலயம்.



# மன்றத் தலைவரின் உள்ளத்திலிருந்து....

"கல்வி அழகே அழகு" எனும் மகுட வாசகத்தைக் கொண்டமைந்த எமது பாடசாலையின் மாணவர் மன்றத்தினால் வெளிவரும் ***'வேல் ஒளி – கதிர் 03'*** சஞ்சிகை வெளியீடானது பாடசாலை வளர்ச்சியையும், மாணவர்களின் கல்வி அறிவையும், மேலும் மெருகூட்டியுள்ளது. இதன்மூலம் மாணவர்கள் மத்தியில் மறைந்திருக்கும் ஆளுமையை வெளிக்கொண்டு வருவது தொடர்பான செயற்பாடு களின் வெளிப்பாடே இவ் வேல் ஒளி ஆகும்.

இவ் வேல் ஒளி மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் படைப்புக்கள் மட்டுமன்றி அதற்கு மேலாக பாடசாலையின் முக்கிய நிகழ்வுகளையும், சாதனையளார்களின் சாதனைகளையும் உள்ளடக்கியதாக புதுப்பொலிவுடன் வெளிவந்திருப்பதனையிட்டு நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். இவ்வாறான படைப்புக்களையம் சாதனைகளையும் உள்ளடக்கிய இவ்வேல் ஒளி சஞ்சிகை யானது ஆசிரியர்கள் மாணவர்களுக்கு மட்டுமன்றி அனைவருக்கும் பயன் மிக்கதாக அமையும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

இச்சஞ்சிகையானது மிகசிறப்பாக வெளிவருவதற்கு அனைத்து வழி களிலும் உதவிபுரிந்த அனைவருக்கும் மாணவர் மன்றத்தின் தலைவர் என்ற வகையில் எனது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு இச் சஞ்சிகை தொடர்ந்தும் புதுப்பொலிவுடன் வெளிவர இறைவனை வேண்டுகின்றேன்.

**செல்வன் ந.நந்தபாலன்**
**மாணவர் மன்றத் தலைவர்**
**யா/வேலாயுதம் மகாவித்தியாலயம்.**



## இதழ் அசிரியரின் உள்ளத்திலிருந்து

எமது வித்தியாலயத்தின் மாணவர் மன்றச் சஞ்சிகையான வேல் ஒளி கதிர் 03 இறையாசியுடன் வெளிவருவதில் அகமகிழ்வெய்துகின்றேன். இச்சஞ்சிகையை வெளியிடுவதனூடாக எமது மாணவர்களின் ஆற்றல்கள் மேன்மேலும் மெருகூட்டப் பட்டு ஆளுமைப்பண்புகள் வளர்க்கப்படும்.

இன்றைய மாறிவரும் உலகின் தேவைகளுக்கேற்ப மாணவர்களின் தேடலை வளர்த்து தம் ஆற்றல்களை வெளிப்படுத்தும் ஒரு களமாக இச்சஞ்சிகை வெளியீடு அமைந்துள்ளது. இனிவரும் காலங்களிலும் இச்சஞ்சிகை சிறப்பாக வெளிவரும் என நம்புகின்றேன்.

இம்மலரை வெளியிடுவதற்கு ஆக்கமும் ஊக்கம் தந்த எமது மதிப்பிற்குரிய கல்லூரி அதிபர் மற்றும் பிரதி அதிபர், மலர்க்குழுவினர், ஆசிரியப்பெருந்தகைகள் ஆக்கங்கள் தந்த மாணவர்கள் ஆசியுரை வழங்கிய கல்விப்புலம் சார்ந்தோர் அனைவருக்கும் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

செல்வன் சோ.நாகசாந்தன்
இதழாசிரியர்
யா/வேலாயுதம் மகாவித்தியாலயம்.

# பொருளடக்கம்


| | |
|---|---|
| உலக மயமாக்கல் | 01 |
| தாயின் பெருமை | 04 |
| புவியியல் அறிவு | 06 |
| **Time Managment** | 08 |
| முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் | 14 |
| ஓசோன் குடையைப் பாதுகாப்போம் | 16 |
| வணிக ஒழுக்கநெறி | 19 |
| பள்ளிப்பருவம் | 22 |
| **Electronic Commerce in Modern Global Marketing Trend** | 24 |
| வாசிப்பின் முக்கியத்துவம் | 26 |
| பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தித்திட்டம் | 28 |
| **MY Country** | 31 |
| இயற்கைச் சமநிலை பேணுவோம் | 32 |
| விடியலை நோக்கிய பயணம் | 34 |
| மரம்வளர்ப்போம் | 35 |
| இசைத்துறையின் சாதனையாளர் | 36 |
| நிலைத்திருக்கக்கூடிய பொருளாதார வளர்ச்சி.... | 39 |
| பெற்றோர் ஓர் ஆலயம் | 42 |
| தாஜ்மஹால் உருவாக்கம் | 43 |
| நட்பு | 45 |
| இந்திய ஓவியமும் அஜந்தா குகைள்............ | 46 |
| நாளும் அகதியாய் | 47 |
| தமிழ்த்தாயே நீ எங்கிருக்கிறாய்? | 48 |
| நல்லகேள்வி! நல்ல பதில் | 49 |
| சிறுவர் நாம் ஒன்றுபடுவோம் | 53 |
| மனிதஉடல் பற்றித் தகவல் | 55 |
| இலங்கையின் மாகாணசபை முறைமை | 56 |
| கல்வித்திணிப்பும் திசைமாற்றமும் | 59 |

# யா/ வேலாயுதம் மகாவித்தியாலயம் - 2013
# மலர்க்குழு உறுப்பினர்கள்



இடமிருந்து வலமாக இருப்பவர்கள்.

செல்வி.வி. இராஜரத்னம், திருமதி ம.அ.மை ராஜ்குமார், (பொறுப்பாசிரியர்), திருமதி வ. அருளானந்தம், திருமதி அ. சற்குணசிங்கம், திரு.அ.திரவியராசா, (அதிபர்) திரு.வ.கருணாமூர்த்தி, திரு.கு.தெட்சணாமூர்த்தி. திரு.தா.குணசேகரம், திரு.யோ.விதுவாகரன்

இடமிருந்து வலமாக நிற்பவர்கள்

செல்வன் வி.றஜிவன், செல்வன் சோ.நாகசாந்தன், செல்வன். ந. மேகரன், செல்வன் ஆ. திவாகர், செல்வன். இ. முரளீதரன், செல்வன் ந. தனுசன், செல்வன் ந.நந்தபாலன்

GraphicPanic.com

# யா/ வேலாயுதம் மகாவித்தியாலயம் அதிபர், ஆசிரியர்கள் - 2013



GraphicPanic.com

# அதிபர் ஆசிரியர்கள்

## இடமிருந்து வலமாக

**இருப்பவர்கள்**

திருமதி அ.ராஜ்குமார்,
செல்வி சா.சின்னையா,
திருமதி. வ.அருளானந்தம் (பகுதித் தலைவர்)
திருமதி.அ.சற்குணசிங்கம் (உப அதிபர்)
திரு.ச.திரவியராசா (அதிபர்)
திரு.வ.கருணாமூர்த்தி
திரு.சி.குகநேசன்
திரு.சி.சிவகணேசன்

**1ம் வரிசை**

திரு.கு.பிரபாகர்
திரு.தா.குணசேகரம்
திருமதி.சி.சிறிதரன்
திருமதி.நி.சிவசுப்பிரமணியம்
செல்வி.செ.சேனாதிராசா
செல்வி வ.செம்மணச்செல்வி
திருமதி.இ.குமாரசுவாமி
திமதி.மா.கந்தையா
செல்வி. வி.இராசரத்தினம்
திருமதி.யே.அன்ரனி தேவராஜா
திருமதி.கு.மணிவண்ணன்
திருமதி.ச.பொன்னுத்துரை

**2ம் வரிசை**

திரு.க.மாதீபன்
திரு.இ.அனிதன்
திரு.யோ.விதூபாகரன்
திரு.கு.தெட்சணாமூர்த்தி
திரு.பொ.சூரியமூர்த்தி
திரு.சி.சண்முகநாதன்
திரு.உ.முரளி



# உலகமயமாக்கல்
## (GlobaliZation)

சலஸ்ரின் வேதநாயகம் தர்சன்
தரம் 13 வர்த்தகப் பிரிவு (2014)

உலகமயமாக்கல் என்பது உலக நாடுகளையும் அவற்றில் வாழும் மக்களையும் ஒருங்கிணைக்கும் ஒரு செயன்முறையாகும். அது பொருளாதார,தொழில்நுட்ப, கலாசார மற்றும் அரசியல் பிணைப்புகளுக்கூடாக உலக மக்களை மிக அருகில் எடுத்து வருவதுடன் அவர்கள் ஒருவரில் ஒருவர் தங்கி இருக்கும் நிலையையும் அதிகரிக்கச் செய்கின்றது. மிக முக்கியமானதாக இருந்துவரும் பொருளாதார கண்ணோட்டத்தில் நோக்கும்போது உலகமயமாக்கல் என்பது அனைத்து நாடுகளிலும் வளர்ந்து வரும் பொருளாதார ஒருங்கிணைப்பாகவும், தேசிய சந்தைகள் ஓர் உலகளாவிய சந்தையில் இணையும் ஒரு செயன்முறையாகவும் உள்ளது. தேசிய சந்தைகள் பொருட்கள், சேவைகள் என்பவற்றிலான அதிகரித்த அளவிலான எல்லை தாண்டிய வர்த்தகத்திலும் சர்வதேச மூலதனம், பணம் என்பவற்றின் அசைவுகளினூடாகவும், தொழில்நுட்ப பரிமாற்றத்திற்கூடாகவும் இது இடம்பெற்று வருகின்றது.

புதிய சந்தை வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்காகவும் செலவு அனுகூலம் மற்றும் உயர் இலாபம் என்பவற்றைக் கருத்தில் கொண்டு பொருளாதார நடவடிக்கைகள் தேசிய எல்லைகளைத் தாண்டி வியாபித்துச் செல்லும் பொழுது பண்ட உற்பத்தி, வர்த்தகம், மூலதனம் என்பன சர்வதேசமயமாக்கப்படுகின்றன. அரசியல் அடிப்படையில் நோக்கும்போது உலகமயமாக்கல் என்பது ஜனநாயக மனித உரிமைகள், அடிப்படைச் சுதந்திரங்கள், பால் சமத்துவம், ஒளிவு மறைவு அற்ற ஆட்சி மற்றும் அரச சாரா அமைப்புக்கள் என்பவற்றின் பெருக்கம் என்றவகையிலேயே கருதப்பட்டு வருகின்றது.

இது தவிர உலகமயமாக்கல் செய்முறை ஒரு சமூகவியல் ரீதியான பரிமாணத் தையும் தன்னகத்தே கொண்டுள்ளது. அதாவது உல மொழியாக ஆங்கிலத்தை ஏற்றுக்கொள்வதும் பொப்பிசை ஹொலிவுட் படங்கள், திடீர் உணவகங்கள் மற்றும் நவீன வாழ்க்கை மோஸ்தர்கள் என்பவற்றின் பரவலாகவும் அது நோக்கப்படுகிறது. பொதுவாக கூறினால் உலகமயமாக்கல் சக்திகள் கைத்தொழில் நாடுகளில் இருந்து தோன்றி வருகின்றன. வளமுக நாடுகளை தம்மால் வடிவமைக்கப்படும் உலகலாவிய அமைப்புக்குள் உள்வாங்கி கொள்வதே இச்சக்திகளின் நோக்கமாகும். அது அனேகமாக மேலை நாடுகளின் மூலதனம், தொழில்நுட்பம், கலாச்சாரம், எண்ணப் போக்குகள், மற்றும் வாழ்க்கைப் பணிகள் என்பவற்றை வளர்முக நாடுகளுக்குள் ஊடுரு வச் செய்கின்றன. இந்தவகையில் இது உலக நாடுகளின் பொருளதார, கலாசார, அரசியல் மற்றும் சித்தாந்த கொள்கைகள் ஒருமுகப்படுத்தும் ஒரு செய்முறையாகும்.

மறுபுறத்தில் உலகமயமாக்கல் என்பதுதொழில் நுட்பத்திற்கு ஏற்பட்டுவரும் முன்னேற்றத்தின் காரணமாக காலம், இடம், மற்றும் தேசிய எல்லைகள் என்பவற்றை சுருக்கியும் இல்லாமல் செய்தும் வருகின்றது. இணையம், இடம், பெயர், தொலைபேசி, தொலைநகல், பொறி முதலிய புதிய தகவல் தொடர்பு தொழில்நுட்பங்கள் மலிவானவை யாகவும், உயர் வேகத்திறன் கொண்டவையாகவும் பரந்த ஆட்புலத்தை உள்ளடக்க கூடியவையாகவும் உருவாகி வருகின்றன.

அவை நிதிச்சந்தைகளின் ஒருங்கிணைப்பையும், பலதேசிய நிறுவனங்களின் பரவலையும் மக்களிடையே தகவல் மற்றும் கருத்துக்கள் என்பவற்றின் பரிமாற்றத் தையும் வியப்பூட்டும் அளவிற்கு துரிதப்படுத்தியுள்ளது.

நாங்கள் இன்று வாழ்ந்துவரும் உலகம், பயங்கரமான போர்கள், வன்செயல்கள் என்பவற்றினாலும் பெருகிவரும் குற்றச்செயல்கள் மற்றும் அரசியல் கொந்தலிப்பு களினாலும் சிதைந்து சின்னாபின்னமாக்கப்பட்டு காணப்படுகின்றது. இருபத்தோரம் நூற்றாண்டின் முதலாவது தசாப்தத்தில் சமாதானமும், செல்வச்செழிப்பும் மற்றும் சக வாழ்வும் என்பவற்றிற்கான எதிர்ப்புக்களை குழப்பங்கள் மலிந்த அரசியல், பொருளா தாரம், சமூக ஒழுங்கு களங்கப்படுத்திக் கொண்டிருக்கின்றது. இந்தப் பின்புலத்தில் மேலைய அதிகார வர்க்கம் அதன் மும்மூர்த்திகளான சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் உலகமயமாக்கல் என்று அழைக்கப்படும் சிக்கலான சர்ச்சைக்குரிய செயன்முறை முன்னெடுத்துச் செல்கின்றது. மேலைய உலகின் ஊடாக வலையமைப் புகளும், கைத்தொழில் அமைப்பின் குறுகிய அக்கறை குழுக்களும் எமது உலகம் இன்று எதிர்நோக்கியுள்ள அனைத்து விதமான பிரச்சினைகளுக்கும் துர்ப்பாக்கியங்களுக்கு மான சர்வதேச நிவாரணியாக உலகமயமாக்கலை சிபார்சு செய்து வருவதுடன் அதற் கூடாக சகல மக்களுக்கும் உரிய வாய்ப்புக்களும், புதிய தெரிவுகளும் கிடைக்க முடியும் என வாக்குறுதி தருகின்றது. ஆனால் மூன்றாவது மண்டல நாடுகளில் பல கோடி கணக்கான மக்கள் வறுமை, வேலையில்லா திண்டாட்டம் மற்றும் போசாக்கின்மை என்ப வற்றின் பிடியில் சிக்கி திணறி வருவதனை அவர்கள் எளிதில் மறந்து விடுகின்றனர்.

உலகவங்கி / சர்வதேச நாணய நிதியத்தின் அனுசரணையுடனான அமைப்பு ரீதியான சிக்கல்கள் நிகழ்ச்சித்திட்டங்கள் 1980களிலும் 1990களிலும் உலகமயமாக்கல் செய்முறையை மேலும் தீவிரப்படுத்தின. பல்தேசிய கம்பனிகளும் இதில் ஒரு முக்கியமான பங்கினை வகித்து வந்தன. அடுத்து சர்வதேச ரீதியில் ஏற்பட்ட திருப்பங் கள் பொன்ற பெரு மாற்றங்கள் உலக பொருளாதாரம் படிப்படியாக ஒருங்கிணைவதற் கானதொரு சூழ்நிலையை தோற்றுவித்தன. 1990களின் நடுப்பகுதியின் போது வளர் முகநாடுகள் அனைத்துமே உலகவர்த்தக நிறுவனத்தின் உரிப்புரிமை பெற்று கொண்ட துடன், வர்த்தக தாரளமயமாக்கலுக்கான கட்டுப்பாடுகளை ஏற்றுக்கொண்டன. அவ்வாறு இருப்பினும் உலகமயமாக்களின் அனுகூலங்கள் நாடுகளுக்கிடையில் சமமான முறையில் பகிரப்படவில்லை என்பதனை ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் மானிட அபிவிருத்தி அறிக்கை போன்ற ஆவணங்கள் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளன.

உலகமயமாக்கலின் விரிவாக்கத்துடன் இணைந்த விதத்தில் சமூக, அரசியல், கொந்தளிப்புகள் தோன்ற முடியும் என்பதை அண்மையில் சீட்டில் நகரத்தில் பல மூன்றாவது உலகநாடுகளிலும் ஏற்பட்ட எதிர்ப்பும், ஆர்ப்பாட்டங்களும் எடுத்துக்காட்டுகின்றன. உலகவங்கி, சர்வதேச நாணய நிதியம் உலகவர்த்தக நிறுவனம் போன்ற சர்வதேச அமைப்புக்கள் உலகமயமாக்களை ஆதரித்து பேசிவந்த போதிலும், வறிய உலகம் எதிர்கொண்டிருக்கும் வறுமை, வேலையில்லா திண்டாட்ட், போசாக்கின்மை மற்றும் தொழில் நுட்பபின்னடைவு போன்ற முக்கியமான பல பிரச்சினைகள் இன்னமும் தீர்க்கப்படாமலேயே இருந்து வருகின்றது. கல்வி, தொழில்நுட்பம், ஆராய்ச்சி, பயிற்சி, நிதி, வங்கித்தொழில், காப்புறுதி மற்றும் போக்குவரத்து போன்ற வளங்கள் அனைத்தும் வளர்ச்சி அடைந்துள்ள கைத்தொழில் நாடுகளிலேயே ஒன்றுதிரண்டுள்ளன. இந்த நிலையில் வளர்முக உலகம் எதிர்காலத்தில் மாற்றம் மற்றும் செல்வசெளிப்பு என்பவற்றை சாதித்துக்கொள்ளக்கூடிய வாய்ப்புக்கள் அரிதாகவே தென்படுகின்றன. உலகமயமாக்கலை முனைப்புடன் ஆதரித்து பேசி வருவார்கள் வறிய நாடுகள் தொடர்பாக அவர்கள் முன்வைத்து வரும் அபிலாஷையுடன் கூடிய இலக்குகள் சாதித்துக் கொள்ளப்படுவதனை உறுதி செய்தலே ஒழிய இன்றைய இருண்ட யதார்த்தத்தினை இன்னும் பல வருடங்களிற்கு அவ்வாறே தொடர்ந்து நீடித்து வரக்கூடும்.

## இன்பதைக் காணமுடியாதவரகள்.

- முயற்சிதான் மகிழ்ச்சியை அளிக்கிறது. முயற்சியினை எவ்வாறு செய்வது என்பதை அறியாத மனிதன் தான் எப்போதும் மகிழ்ச்சி இல்லாத மனிதனாக இருக்கிறான்.
- ஒருவன் தன் வாழ்நாளின் துவக்கத்திலிருந்தே சோம்போறியாக இருப்பவர்கள் ஒருபோதும் இன்பத்தைக் காணமாட்டார்கள்.

## நோய்வாய்ப்படுவதற்கு கிருமிகள் காரணம் அல்ல

- சந்தேகம்
- மனம் சோர்வடைதல்
- சுயநலத்துடன் தன்னையே கருத்தில்கொள்ளுதல்
- இவை எல்லாம் ஒரு மனிதனைத் தெய்வீக ஒளியில் இருந்தும், சக்தியில் இருந்தும் உன்னைத் துண்டித்துவிடுகின்றன.
- பகை சக்திகளின் தாக்குதலுக்குச் சாதகமாக இருக்கின்றன. நீ நோய்வாய்ப்படுவதற்கு காரணம் கிருமிகளல்ல. இதுதான் காரணம்.



# தாயின் பெருமை

கோபலகிருஸ்ணன் - சுஜன்
தரம் 10A

தாயே நீ என்னைச் சுமந்த போது
வறுமை நம்மை ஆண்டது
எமக்காகக் கனதூரம் கால் நடையாய்
கூலிக்குச் சென்றாய் உமக்குக்
கொடுக்கும் கூலியில் கூட
ஒரு பகுதியைஎமக்காக
மடியில் கட்டி வைத்து தந்தாய்

மாலை ஐந்து பணியானதும் உன் வரவை
பார்த்து பார்த்து காத்திருந்தேன்
எத்தனையோ நாட்கள் - சில சில நாட்களில்
ஏழு மணியை தாண்டியும் நின்று
கொட்டும் மழையிலும் நனைத்தும்
ஈரத்தை பார்க்காது எம் பசி
தீர்த்து கட்டிக் காத்தாய்.....

அது அந்தக் காலம்
இன்றோ உன் அருகில்
நானில்லை ஆனால் கண் தூங்காது
என் மழலைகளையும் நீயல்லவா
சுமக்கிறாய் காத தூரத்தில்
நான் இருந்தும் கண்
எதிரே தெரிவது நீதானே....

வாழ்க்கை வட்டத்தில் நான்
தோற்று விட்டேன் ஆனாலும்
உன் சுமைகளைச்
சுமக்க அருகில் நானில்லையே....

உன் பசி போக்கி
மேலும் பல ஆண்டுகள் உம்மை
வாழ வைக்க என்னால் முடியும்
தாய் எனும் தங்க நிகர் சொத்தே
நீதானே .

உம்மை போற்ற இந்த
ஏடுகள் தான் போதாதே
ஏட்டை தொட்டு பேனை முனையால்
தாயின் பெருமை எழுதத்துவங்கினால்
ஏடுகள் முடிந்தாலும் எழுத்துக்கள் தான் முடியுமோ
உன் புகழை கூறிடும்
என் மனதில் உள்ள ஒரு துளி
மட்டுமே இது....,

பெற்றோரின் புகழை
பேனை முனையால்
பெயர் விளங்கச் செய்த வேல் ஒளியே
உனக்கும் என்னன்பு அன்னைக்கும்
மென்மேலும் பல்லாண்டு காலம்
வாழ என் வாழ்த்துக்கள்!

சரியென்றும் தகுதி யென்றும் யாம் கருதும் ஒரு செயலைச் செய்வதிலே எமது இன்பமும் மன அமைதியும் தங்கியுள்ளன. ஏனையோர் சொல்வதை அல்லது செய்வதைப் பின்பற்றுவதால் சிலவற்றையடைய முடியாது.



# புவியியல் அறிவு

கு. குபேரன்
தரம் - 12 - கலைப்பிரிவு (2015)

1. மிகவும ஈரமான பகுதி என அழைக்கப்படும் பிரதேசம்
   இந்தியாவில் உள்ள மௌசின்ராம் பிரதேசம (11.873mm)

2. மிகவும் வெப்பமான பகுதி என அழைக்கப்படும் பிரதேசம்
   எத்தியோப்பியாவில் உள்ள தவோல் பிரதேசம் (34.4°c)

3. இமயமலையின் உச்சியை அடைந்த முதல் பெண் வீரங்கனை யார்?
   ஜின்கோ தபேய் -1975 (ஜப்பான்)

4. நோபல் பரிசினைப் பெற்ற முதல் பெண்மணி
   மேரி கியூரி

5. உலகின் மிகப்பெரிய கப்பல் எது?
   (Ideal x) ஐடியல் எக்ஸ்

6. உலகின் இரண்டாவத நீளமான கடற்கரையான மெரினாவை வடிவமைத்து பெயர் சூட்டியவர் யார்?
   கிரண்டப்

7. உலகின் மிக நீண்ட மலைத்தொடர் அமைப்பு?
   மிட் அட்லாண்டிக் ரிட்ஜ்

8. உலக மக்களினன் சராசரி ஆயுள்?
   65-82 வருடம்

9. ஹெர்குலிஸ் தூண்கள் என அழைக்கப்படும் நாடு?
   ஜிப்ரோல்டர்

10. வில்லிப் பூக்களின் நாடு எது?
    கனடா

11. அதிகாலை அமைதி நாடு
கெரியா

12. மிகப்பெரிய எரிமலை
டாமு மெஸிஃப்

13. கடந்தவருடம் பொதுநலவாய மாநாடு இடம்பெற்ற இடம்
அவுஸ்ரேலியாவின் பேர்த் நகரில்

114. எலிகளுக்கான ஒலிம்பிக் போட்டி நடத்திய நாடு
அமெரிக்கா

115. சூரியனின் கரும்புள்ளிகள் தோன்றுவதற்கு காரணமான பிரதான வாயு
ஹீலியம்

☞ நாங்கள் கூடிவாழ்வோர் வழியால் எங்களிலுள்ள குறைகளை அறியலாம். அன்றி அறிந்து திருந்தவுங்கூடும். தினசரி வாழ்வில் மிகவும் புனிதமாக வாழ வேண்டும் அப்போதுதான் நாம் உண்மையான தொண்டு ஆற்றலாம்.

☞ எங்களுக்கு எங்கள் பிழைகளைக் காண விருப்பமில்லை. ஆனால் மற்றவர்களின் பிழை காண்பதில் மகிழ்கின்றோம். இப் பழக்கத்தால் அதிக துன்பம் உண்டாகின்றது.



# Time Managment

Mrs.M.A.M.Rajkumar
B.A,Dip in Edu.

Good time management means defining priorities and scheduling activities.

**01. Keys to effective time management**

- Set targets for your group
- Set deadlines for target
- Design the appropriate structure and delegate.
- Ensure efficient use of resources
- Train and develop capacities and capabilities
- Develop team work for better results.

**2. Daily performance time schedule**

| | |
|---|---|
| 09.00-10.30 | Peak energy time - schedule urgent and important activities |
| 10.45-12.45 | Prime time - schedule not urgent but important activities |
| 01.15-03.15 | Supervision time/ low energy time - schedule no urgent not important routine and repeat task. |
| 03.30-04.45 | Review/Renew time - What completed / What not completed |

| Give Priority | Allocate time |
|---|---|
| Urgent and important | not urgent not important |
| Urgent not important | not urgent not important |
| Delegate | Say No |

**The three Rules for effective time management.**

1. Don't Create impossible situation
2. Define Priorities.
3. Avoid distract.

Make time your friend not enemy

**Define Your Priorities Using the 3 list Method.**

All time management begins with planning use list to set priories, plan activities and measure progress one approach is the 3 list method.

**LIST - 1 - The weekly Calendar.**

Create a weekly calendar, make it your basic time budgeting guide list your courses work, study time, recreation meal. T.V , relax etc. Plan to study first priority classes when your best. Be flexible adopt your schedule to changing need keep your schedule handy and refer to it opposite work change it.

**LIST - 2 - The Daily Things to do"**

Write down all the things that you want to do today.

Note: Home work due or test or subject. You want to emphasize include shopping and personal calls etc.

This list is a reminder use it to set Daily priorities and to reduce decision making and worry If time is light moving items to your long term list.

**LIST - 3 - Goals and Other things.**

This can be one or two list a monthly list and a long term list. Put down Your goals and things. You have to do what do you want to accomplish over the next month or year. What do you need to buy? Use this list to keep tract of all your commitments if you're worried about some thing put it on this list to develop long term goals and to free your mind to concentrate on today.

**Effective Time Management for Excellent Performance**

- Be always Punctual.
- In full control of your time.
- Utilize your time very efficiently.
- Always carry out work on the basis of your priorities.
- Maximize usage your peak energy period.
- Always eliminate all unnecessary and inappropriate task.
- Always have a plan to improve efficiency in handling routine matters.
- Prepare a daily "Things to do list"

- Not waste your time.
- Work according your short - medium and long term goals.
- Very systematic in all your activities.
- Work according to a well planned schedule.
- Complete all your task according to your schedule.
- Never postpone scheduled activities.
- Undertake a time audit every night.
- Prepare for tomorrow every night.

## Time Consumer's Check List.

| Problem | Possible Remedies. |
|---|---|
| **❊ TASK** | |
| 01. Work pilling up | - Set Priorities<br>- Set deadlines<br>- Make realistic time estimate<br>- Most people under estimate<br>- Add 20% to your first guess. |
| 02. Trying to do too much at once | - Set priorities<br>- do one thing at a time<br>- Learn to say 'No' to yourself as well as other people. |
| 03. Getting involved in too much details | - Delegate more |
| 04. Postporting unpleasant task | - Set time table and stick to it<br>- Get unpleasant task over with quickly - you will feel better afterward. |
| 05. Insufficient time to think | - Reserve blocks of time part of a day or week for thinking. No paper work no interruption. |
| **❊ PEOPLE** | |
| 01. Constant interruption from people calling in to your office | - Use secretary to keep unwanted visitors out. |

- Make appointments and see that people stick to them.
- Reserve block times when you are not to be interrupted.

02. Constant telephone interruption.

- Get your secretary to interrupt where appropriate divert calls.
- State firmly that your with call block which convenient.

03. Too Much time spent in come

- Decide in advance what you want to achieve when you meet some one and keep pleasantries to a minimum at the beginning and end.
- Concentrate on keeping your self and other person to the point it is too easy to divert or be diverted.
- Learn how to end meetings quickly but not too brusquely.

❊ **Paper Work**

01. Flooded with incoming paper

- Get your secretary to sort it into three folders action now, action latter information.
- Take yourself off the circulation list of useless information.
- Only ask for written memos and reports which when really need them.
- Encourage people to present information and reports clearly and succinctly
- Ask for summaries rather than the whole report.
- Take a course in rapid reading

02. Too many letters /Memos to write / dictate.

- Use telephone more.
- Avoid individually typed

acknowledgments.

- Practice writing succinct yes / No lets talk on the memos your receive and return them to the sender.

03. Paper work pilling up

- Do it now.
- Set aside the first half or so in the day to deal with urgent correspondence.
- Leave a period at the end of the day for less urgent reading.
- Aim to clear at least 90% of the paper on your desk every day.

04. Lost/ mislaid papers

- Arrange or get your secretary to organize papers on current projects in separate easily accessible folders.
- Don't hang on to papers in your pending tray clear it daily.
- Set up filing and retrieval system which will enable you to get at papers easily.
- Ensure that your secretary keeps a day method of turning up papers.
- Keep a tidy desk.

*** Meetings.**

01. Too much time spent metting

- If you set up the meeting avoid regular in meetings when there is nothing that needs saying regularly revise all the meetings you hold and eliminate as many as you can.
- Get your self taken off committees If your presence is not essential or if some one else is more appropriate.

- As chairman: Set limits for the duration of meetings and keep to them cut out waffle and repetition allow discussion but insist on making progress have a logical agenda and stick to it.
- As a member: Don't waffle don't talk for the sake of talking don't waste time scoring point or boosting your ego.

**❊ Traveling**

01. Too much time spent on travelint

- Use the phone or post.
- Send some one.
- Ask yourself every time you plan to go any where is my journey really necessary?
- Plan the quickest way air rail or car.

மனிதர்கள் அனைவருக்கும் கவனத்தன்மையும் ஒருமுகப்படுத்தும் திறனும் இருக்கிறது. இதை சரியாக பயன்படுத்திக்கொள்பவர்களோடு எடுத்த செயலில் வெற்றி காணக்கின்றனர். ஒருவர் தலைசிறந்த விஞ்ஞானியாகவோ மேதையாகவோ இருக்கிறார் எனில் அது அவரது ஒருமுகப்படுத்திய தன்மையாலேயே சாத்தியமாகிறது. ஆகவே, மனதை ஒருநிலைப்படுத்துவது அவசியம்.



# சிறுகதை

## முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.

வேலுப்பிள்ளை கனீஸ்
தரம் 10A

இன்னும் எவ்வளவு நேரம் காத்திருக்க வேண்டி இருக்குமோ தெரியவில்லை எனஅலுத்துக் கொண்டே யோசித்தபடி இருந்தான் மதி. அந்த முதியோர் இல்லத்தில் எல்லோரும் தத்தம் வேலைகளில் கவனமாய் இருந்தனர். பல்கலைக்கழகத்தில் ஆய்வொன்றினை சமர்ப்பிப்பதற்கான தகவல்களை சேகரிப்பதற்காக மதி, முதியோர் இல்லத்திற்கு வந்திருந்தான். அம்முதியோர் இல்லம் முதியோர்களின் எண்ணிக்கை அதிகரிப்பினால் நிரம்பி வழிந்தது.

ஒவ்வொரு முதியோர்களும் ஒவ்வொரு நூற்பெட்டகங்கள் அவர்களின் அனுபவங்கள் எமக்கு எத்தனையோ வகையான அறிவுரைகளை உரைக்கின்றன. அவ்வாறானவர்களை ஏன்தான் பிள்ளைகள் இங்கு கொண்டு வந்து விடுகிறார்கள் என்று தெரியவில்லை. என்றவாறாக அவர்கள் மீது பரிதாபம் கொண்டான்.

ஒரு சிலர் பேப்பர் படித்துக்கொண்டிருந்தனர். வேறுசிலர் ஒன்றாகக் கூடி எதைப்பற்றியோ காரசாரமாக விவாதித்துக்கொண்டிருந்தனர. இன்னும் சிலர் சிறிய பூந்தோட்டங்களை அமைத்துக் கொண்டிருந்தனர். ஆனால் அவர்கள் எல்லோரிலும் ஒருவர் மட்டும் மதியை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தார். மதி தன் பார்வையை வேறு பக்கம் திருப்பினாலும் ஆனால் அந்த நபர் மதியை பார்ப்பதை விடவே இல்லை.

அங்குள்ள முதியவர்களுடன் ஒப்பிடும்போது அந்நபர் சற்று வித்தியாசமாகவே தெரிந்தார். அந்த முதியோர் இல்லத்திற்கு வரவேண்டிய வயதே இல்லை. முகத்தில் ஓர் மிடுக்கான தோற்றம் மொத்தத்தில் அந்த நபர் இளமையாக தோற்றமளித்தார்.

இதற்கிடையில் அவ்இல்லத்திற்கு பெறுப்பான அதிகாரி வந்துவிடவே அவரிடம் அனுமதி வாங்கிய பின்னர் முதியோர்களை சந்திக்கச் சென்றான். மதி முதலில் அந்தநபரைதான் சந்திக்க வேண்டும் என்ற ஆர்வம் அவனிற்கு துளிர்விட்டது. அவர் அருகில் ஒன்று பக்கத்தில் இருந்த கதிரையில் இருந்தான். உடனே கதைக்க தொடங்க மதியால் முடியவில்லை ஓர் இரு மௌன இடைவெளியின் பின் நீஙகள் ஏன் என்னையே உற்றுப் பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள்? என்றான். "ஓ.. அதுவா தம்பி, உங்கள் சாயலில் எனக்கு ஒரு மகன் இருக்கிறான். உங்களைப் பார்த்ததும் எனக்கு அவனின் ஞாபகம் வந்து விட்டது" என்றபடி கண் கலங்கினார்.

இவ்வளவு நேரமும் அவரின் முகத்திலிருந்த புன்சிரிப்பு மிடுக்கான தோற்றமெல்லாம் எங்கோ மூடி மறைய விரக்தி, கவலை, மனச்சோர்வு எல்லாம் அவரின் முகத்தில் குடிகொண்டது. "உங்கட மகன் வெளிநாட்டிலையோ இருக்கின்றார்" இல்லை தம்பி அவன் பருத்தித்துறையில் தான் இருக்கின்றான. ஓ அப்படி என்றால் ஏன் உங்களை அவர் இங்கு கொண்டு வந்து விட்டார். அதை ஏன் கதைப்பான் தம்பி என்றவடி அவர் மீண்டும் கண் கலங்கினார். அந்த நிலைமை மதிக்கு பெரும் தர்ம சங்கடத்தை ஏற்படுத்தியது. எப்படி அவருக்கு ஆறுதல் கூறித் தேற்றலாம் என யோசித்தபடியே ஐயா! நீங்கள் ஒன்றிற்கும் கவலைப்படதேங்கோ, என அவரை தேற்ற வேண்டும் என்ற நோக்கத்தோடு வெளிப்படுத்தினான் மதி.

அப்படிச் சொல்லாதே தம்பி, என்ர மகனிற்கு அப்படி ஒரு நிலை வரவே கூடாது. நான் படுகிற கஸ்டத்தை அவனும் படக்கூடாது என்ற படி மேலே பார்த்து கடவுளை கும்பிட்டார். உங்கட மகன் இப்படிச் செய்த பின்பும் நீங்கள் அவருக்காக கதைக்கிறதைப் பார்த்தால ஆச்சரியாமாக இருக்கு நான் இங்கு வந்து சேர்ந்ததிற்கு என் மகன் காரணமில்லை நான் செய்த பாந்தான் எனக்கூறிய அவரை விளங்காது மதி உற்றுப்பார்க்க அவர் மீண்டும் கதைக்க... ஆரம்பித்தார்.

என்ன தம்பி அப்படிப்பார்க்கிறாய், என்ர மகன் எனக்கு செய்த அநியாயத்தைப் போல நானும் என்ரதாய் தகப்பனிற்கு அநியாயம் செய்தேன். அப்பநான் செய்த பாவதத்திற்கான தண்டனையைத் தான் இப்ப நான் அனுபவிக்கின்றேன் என்றபடி பெருமூச்சு ஒன்றை வெளிவிட்டார். அவர் முழுவதையும் கூறிமுடிக்கட்டும் என்ற எண்ணத்துடன் மதி அமைதியாக காத்திருந்தான். மதியை சிறிது நேரம் காக்க வைத்து மீண்டும் அவர் கூறத் தொடங்கினார்.

என்ர அப்பா அம்மாவையும் அவர்களுடைய கடைசிக்காலத்தையும் கவனிக்காது விட்டிட்டன் தம்பி. என்னுடைய வீட்டில் அவர்களை பராமரிக்க வேண்டிய பெறுப்பை தட்டிக் கழிச்சிட்டன் கடைசியில் அவர்கள் சிரழிஞ்சுதான் இறந்து போனார்கள் அப்படி நான் செய்ததற்கு என்ர பலன்தான் என்றபடி விம்பினார்.

என்ர மகனிற்கு வீட்டில் இருக்க நேரமில்லை வேலைக்கு போனால் இரவுதான் வருவான் பேரப்பிள்ளைகளும் சிறுசுகள். அவர்களைப் பராமரிக்கவே சரியான கஸ்டம் என்னையும் வைத்து பார்க்க முடியாததனா் என்னை இங்கு கொண்டு வந்து விட்டிட்டான் என அவரின் மனதில் இருந்த பாரம் எல்லாம் இறக்கி வைத்தார்.

அவரிடமிருந்து விடைபெற்றபின் இன்றைய காலங்களில் முதியோர் இல்லங்களில் முதியோர் எண்ணிக்கை அதிகரிக்க காரணம் முன்புதம் பெற்றோர்களை பராமரிக்காது அவர்களிற்கு செய்யவேண்டிய கடமைகளை செய்யாமலே அவர்கள் பிற்காலத்தில் தமது இன்னல்களை அனுபவிக்கின்றார்கள் என தனது ஆய்வு முடிவை எழுதவேண்டும் என்ற எண்ணத்தோடு மதி அங்கிருந்து சென்றான்.



# "ஓசோன் குடையைப் பாதுகாப்போம்"

திருமதி இ.குமாரசுவாமி
(Science Trained)

நாம் வாழும் வீடு பூமி
எமைக் காக்கும் அன்னை பூமி
பூமித்தாய் எமைப்பாதுகாக்க
கொண்டதே ஓசோன் குடையதனை

ஒசோன் குடையில் ஓட்டிதனை
கண்டது பிரித்தானியா 1970களில்
அப்போது இச்செய்தி
அதிக முக்கியத்துவம் பெறவில்லை

பூமியில் ஏற்பட்ட பயங்கர
விளைவுகளைப் பட்டியலிட்டபோதே
ஒசோன் ஓட்டை உலகளாவிய
சூழற் பிரச்சினையாய் விசுவரூபமெடுத்தது.

இயற்கை கொடுத்த இராட்தசக் குடை
சூரியனின் புற ஊதாக் கதிர்களை
உறிஞ்சி தீங்கிலாத ஒளியைப்
பூமிக்கு விடுவதன் விந்தையடா.

குளோரோ புளோரோ காபனுடன்
மெதையில் புரோமைட் போன்ற
தொண்ணூறு வேதிகள் ஒன்று சேரந்து
துளைத்திடும் ஓட்டை ஒசோனில்

Fridge இன் அதிக பாவனையால்
சூழலில் CFC தாராளம்
CFC தரையில் பரம சாதுவாயினும்
வானத்தில் மகா பயங்கர வாதிகளே.

CFC யில் பலவகை அவற்றுள்
CFC11, CFC 12, CFC 15
என்று அடுக்கிக் கொள்ளலாம்.
1700 ஆண்டுகள் சாகவரம் பெற்ற

"ஆரூர" அரக்கர்களாக உலாவும்
இவை நீரில் கரையா மாட்டா
வளிமண்டலத்தை நிரந்தரமாக
ஆக்கிரமித்து ஆட்சி செய்யும்.

பாவனை முடிந்தபின்பு கூட
உருக்குலையாமல் உருவெடுத்து
வளியில் சாவகாசமாயப் பயணித்து
ஒசோன்படையை அடைந்து

கைவரிசையை காட்டும் நிதம்
புற ஊதாக் கதிர்களைச் சிதைத்து
குளோறின் அணுக்களை விடுவிக்கும்
ஒசோன் படையில் ஓட்டை வரும்

ஒருமுறை அழிக்கும் குளோரின் அணு
மீளவும் மீளவும் சங்கிலித் தொடராகி
மீண்டும் மீண்டும் அழித்து
ஒசோன் படையைச் சிதைத்துவிடும்.

தனக்குத்தானே சிகிச்சையளிக்கும்
இயற்கையிடம் இந்தப் பொத்தல்களைச்
சீர்செய்யக் கழிம்புகள் எதுவுமில்லை என்றால்
அதன் வீரியம் புரிந்துவிடும்.

ஒசோன்படையை வேட்டையாடும்
வளிப் பதனப படுத்திகள்
CFC இன் பிறப்பிடமாம் இது மட்டுமா
மோட்டார் வாகனங்களின் வளிப்பதனப்படுத்திகளும் இதிலடங்கும்.

CFC யுடன் ஒப்பிடுகையில்
40 மடங்கு வீரியத்துடன் மோதுமாற்றலுண்டு
மெதைல் புரோமைட்டுக்கு எனினும்
ஆயுட் காலம் குறைந்தது.

புற ஊதாக் கதிர்களின் B வகைக் கதிர்வீசல் (UV-B)
மனிதரில் தோற் புற்று நோயையும்
கண்களில் குருட்டையும் ஏற்படுத்தும்
பயிர்களின் விளைச்சல் குறைவடையும்.

கடல்நீரிலும் தாக்கம் உண்டாகும்
ஒளி வலய அலை தாவரங்கள்
அழிவுக்கு உள்ளாகும் ஆபத்து
கடலுயிர்களின் இனப்பெருக்கு செயற்பாடு பாதிக்கும்

இதற்கு வழி காணவே
கூடியது கூட்டம் ஒன்று கனடாவில்
மொன்றியல் உடனபடிக்கை உருவானது
ஒசோன் படைக்கு வேட்டு வைக்கும்

வேதிகளின் பாவனையைக் குறைக்கவேண்டும்
சூழல் விரோதிகளை அழிக்கும் ஒப்பந்தம்
பெரும் சாவல்களை எதிர்கொண்டது
அதிகளவில் வெற்றிபெற்றதும் மொன்றியல் ஒப்பந்தமே

ஒசோன் விரோத சேதிகளைக் களைந்திட்டாலே
ஒசோன் படையின் காயங்கள் ஆற வழியுண்டு
ஒசோன் படை சிதைவதால் பூகோளம் வெப்பமடைந்து
புற்று நோய்க்கு காரணமாய் அமைந்துவிடும்.

சூழலைச் நேசமாக்க ஒசோன்
குடையைப் பாதுகாப்போம்
ஒவ்வொரு மனிதனும் உணர்ந்து
ஒற்றுமையாகச் செயற்படுவோம்.

சூழல் வேதிகளின் பாவனையைக் குறைப்போம்
இதமான சூழலின் இன்பமாக வாழ்வோம்
செப்ரெம்பர் ஒன்பதில் ஒசோன் படைப்
பாதுகாப்புத் தினத்தைக் கொண்டாடி மகிழ்வோம்.



# வணிக ஒழுக்கநெறி
# ( Business Ethics)

திருமதி. கு.மணிவண்ணன்
(B.com,PGDE)

இருபதாம் நூற்றாண்டின் இறுதிக்கட்டத்தில் வணிகவிழுமியம் பற்றியகொள்கை மீதான நாட்டம் படிப்படியாக அதிகரித்து இக்காலத்தில் வணிக விழுமியம் பற்றி பல வெளியீடுகள் பிரசுரமாகிறது. 21ம் நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் பூகோள மயமாத லுடன் சுதந்திரச் சந்தை பற்றிய அறிவும் ஊக்கமும் அதிகரித்தபோது வணிக ஒழுக்க நெறி பலருடைய விமர்சனங்ளுக்கு உள்ளான தலைப்பாகி இன்று வரை முக்கியத் துவம் பெற்று விளங்குகின்றது.

இவ்வகையில் வணிக ஒழுக் நெறி என்பது வணிகம் தனது கருமங்களை நடாத்திச் செல்லும்போது தமக்கும் ஏனைய தரப்பினருக்கும் பரந்த அளவில் முழுச்சமூகத்துக்கும் நன்மை ஏற்படும் முறையில் செயல்படுதல் ஆகும். அதாவது வணிக செயற்பாடுகளை மேற்கொள்ளும் பொழுது சரியான நடவடிக்கைகளை மேற்கொள்வதும் பிழையான நடவடிக்கைகளை மேற்கொள்ளாது இருத்தலும் ஆகும். சுருக்கக் கூறின் நல்லது கெட்டது பற்றி ஒருவரிடம் உள்ள அறிவு (what is good wha is Bad) என எளிமையாக கூறலாம்.

தற்காலத்தில் வணிகங்கள் எதிர்நோக்கும் பல்வேறு சாவல்களுக்கு முகம் கொடு முகமாக பல வணிகங்கள் வணிக ஒழுக்க நெறி தொடர்பான ஒழுக்க கோவையை (Code of Ethics) பிரிசுரிக்கின்றன.

இங்கு ஒழுக்க நெறிக்கோவை எனும்பொழுது வணிகத்தில் ஊழியர்களால் பின்பற்றப்படவேண்டிய அல்லது ஊழியர்களின் ஒழுக்கமான நடத்தை முறைபற்றிய எழுத்து மூலமான விதிகள் ஒழுக்க நெறிக் கோவை எனப்படும். இது எழுத்து மூலமாக வெளிப்படுத்தப்படுவதால் ஊழியர்கள் அதனை நன்கு வாசித்து தெரிந்து கொண்டு பிரயோகரீதியாகப் பயன்படுத்துவர் என எதிர்பார்க்கப்படும். இதன் மூலம் நிறுவனங் கள் சிறப்பான முறையில் செயற்பாடுகளில் ஈடுபடமுடியும்.

வணிக ஒழுக்க நெறிக்கோவையின் முக்கயித்துவத்தினை நோக்கும்போது ஊழியர்கள் தொடர்பாக மட்டுமன்றி வெவ்வேறு தொழில்கள் தொடர்பாகவும் உருவாக்கப்பட்டு அதன் மூலமாக அத்தொழிலுக்கான மதிப்பும் நம்பிக்கையும் உயர்வான அங்கீகாரமும் ஏற்படுத்திக் கொள்ளப்படுகின்றது. வைத்தியத் தொழில், கணக்கீட்டுத்தொழில், கணக்காய்வுத்தொழில் போன்ற உயர்தொழிலுக்கும் அந்தந்த உயர் தொழிலாளர்களால் உயர் தொழில் ஒழுக்க நெறிக்கோவை (Professional Ethics) தயார் செய்யப்பட்டுபின்பற்றப்படலாம்.

வணிக ஒழுக்க நெறியின் முக்கிய உள்ளடக்க விடயங்கள் ஆக நடைமுறையில் உள்ளசட்டதிட்டங்களை மதித்தல், நியாயத்துவமாக நடத்தல், நேர்மையாகச் செயலாற்றுதல், உண்மையாகவும் ஏனையவர்களுக்குத் தீங்கிழைக்காமலும் செயலாற்றுதல் என்பன காணப்படுகின்றன.

இவற்றை எடுத்துநோக்கும்போது நியாயமாகவும் நேர்மையாக போட்டியிடல் எனும்போது தற்காலத்தில் வணிகங்களுக்கு இடையில் காணப்படும் கடும்போட்டிச் சூழலில் சில வணிகங்கள் வெற்றி கொள்வதற்கு சட்டதிட்டங்களுக்கு முரணாகவும் வணிக ரகசியங்கள், உற்பத்தி நுட்பங்களை களவாக பெற்றுக்கொள்ளுதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன. இவற்றை தவிர்த்து வணிகச் செயற்பாடுகளை மேற்கொள்வது முக்கியமானதாக கருதப்படுகின்றது.

உண்மையாக தொடர்பாடலை பேணுதல் எனும் போது வணிகங்கள் வாடிக்கையாளர்களை பிழையான வழிகளில் இட்டுச் செல்லக்கூடியவகையில் விளம்பரங்கள் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடாது இருத்தலை குறிக்கும்.

மற்றையவர்களுக்கு தீங்கு ஏற்படாது செயற்படுத்தலை நோக்கும்போது வணிக செயற்பாடுகளை மேற்கொள்ளும் பொழுது வணிகம் தொடர்பான சகலகட்சினர்களுக்கும் பாதகமின்றி செயற்பவதை குறிக்கும். அதாவது நிறுவன முகாமையாளர்கள் வணிகநிதியை முறையற்ற வகையில் பயன்படுத்தல் வணிகத்தின் இரகசியங்களை போட்டிநிறுவனங்களுக்கு விற்பனை செய்தல் போன்ற நடவடிக்கை காரணமாக நிறுவனம் சார் தரப்பினர் பாதிப்படையலாம். இவற்றை தவிர்த்து வணிக செயற்பாடுகளை மேற்கொள்ளுதலை குறிக்கும்.

வணிக ஒழுக்க நெறிகளை பின்வருமாறு குறிப்பிடலாம்.

1. நிதித்துறைக்குரிய ஒழுக்கநெறிகள்
2. மனிதவள முகாமைத்துவ ஒழுக்கநெறிகள்
3. சந்தைப்படுத்தல் ஒழுக்கநெறிகள்
4. உற்பத்திக்குரிய ஒழுக்கநெறிகள்
5. விவேகசொத்துக்கள் தொடர்பான ஒழுக்க நெறிகள்

நிதித்துறைக்குரிய ஒழுக்க நெறியை நோக்கும்போது நிதித்துறையில் நிகழக்கூடிய ஒழுக்கமுறையீனங்களைத் தடுத்து உயர்தரத்துடன் நிதிக்கருமங்களை நடாத்திச் செல்வதற்கும், நிதிச்சந்தையில் நிகழக்கூடிய முறையீனங்கள், செலவாணி மோசடி பங்குச்சந்தையில் நிகழக்கூடியமோசடி, அவசியமற்ற கொடுப்பனவுகளும் செலவுகளையும் இழிவுபடுத்தலுக்கு பயன்படுகிறது.

மனிதவள முகாமைத்துவ ஒழுக்க நெறியை எடுத்துக் கொண்டால் கைத்தொழில்

உறவு அல்லது வேலைகொள்வோருக்கும் வேலையாட்களுக்கும் இடையிலான தொடர்பில் ஏற்படும் பிரச்சிகைளை இழிவுபடுத்துவதற்கு உதவுகின்றது. இதனுள் வேலை செய்வோர் வேலை கொள்வோர் கடமைகளும், உரிமைகளும், தொழில்ப ாதுகாப்பு, சுகாதாரப் பாதுகப்பு, சமத்துவமாகக் கருதுதல் பாலியல்வதை போன்றவை பற்றிய ஒழுக்க நெறிகள் உருவாக்கப்படலாம்.

சந்தைப்படுத்தல் ஒழுக்கநெறியை எடுத்துக்கொண்டால் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளின் போது மேற்கொள்ளப்படும் போலியான விளம்பரங்கள், போலி உத்தரவாதங்கள், பிழையான தகவல்களை வழங்கல், முறையற்ற விற்பனை மேம்படுத தல் நடவடிக்கையில் ஈடுபடுத் பிழையான விலையிடல் முறைகள் போன்றவற்றை நீக்குவதற்கு இவ் ஒழுக்க நெறி அவசியமானது.

உற்பத்திக்கிரிய ஒழுக்க நெறியை நோக்கும்போது சூழல் மாசு அதிகரித்தல், உலகவெப்பநிலை உயருதல், உயிரியல் பன்மைத்துவத்துக்குத் தீங்கு நிகழுதல் போன்ற சூழல் பிரச்சினைகள் உற்பத்தயின்போது தோன்றுதலால் உற்பத்தி தொடர்பான ஒழுக்க நெறிமுறையை உருவாக்கவேண்டிய தேவை எழுந்துள்ளது. இவ் ஒழுக்க நெறியினை முறையாக கடைப்பிடிப்பதன் மூலம் சூழல் மாசடைதலை இழிவுபடுத்துதல், மனிதருக்குத் தீங்கான உற்பத்திகளான மதுபானம், போதை மருந்துகள், யுத்த ஆயுதங்கள் ,இரசாயன உற்பத்திகள் போன்றவை தொடர்பான கட்டுப்பாட்டை மேற்கொள்ளல், செயற்கை உணவு பானங்கள் தொடர்பில் அக்கறை கொள்ளல், நடமாடும் தொலைபேசிகளில் வெளிப்படும் அலைகள் றேடியோசன உள்ள தொலைபேசிகள் போன்றவற்றினால் நிகழும் விபத்துக்களைத் தடுத்து விரும்பத்தகாத விளைவுகளை தவிர்த்துகக் கொள்ள முடியும்.

இறுதியாக விவேககச் சொத்துக்கள தொடர்பான ஒழுக்க நெறிமுறையினை எடுத்து நோக்கின் விவேக சொத்துக்கள் மூலம் உரியவர்கள் நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் அதனை வேறு நபர்கள் சட்டரீதியற்ற வகையில் பயன்படுத் தாது இருப்பதற்கு இவ் ஒழுக்க நெறி அவசியம் ஆகின்றது. இதன் அடிப்படையில் வியாபாரக்குறி , வெளியீட்டு உரிமை, ஆக்க உரிமை, பேட்டன் உரிமை, போன்றவற்றை மோசடியாகப் பயன்படுத்துதல். ஊழியர்திறன்களை தமதாக்கல், வணிகம் பற்றிய இரகசி யத் தகவல்களை அளிக்கும் தீயவர்களை, சேவையை நிகழ்த்தல் போன்ற முறையீ னங்களைத் தடுப்பதற்கு ஒழுக்க நெறி உதவியாக அமையும்.

வணிக விழுமியங்களை முறையாக கடைப்பிடிப்பதன் மூலம் நிறுவனங்கள் நன்மதிப்பினை உயர்த்தி நீண்ட காலத்திற்கு நிலைத்திருக்கமுடியும.


உசாத்துணை நூல்கள்:

The Black well guide to business ethics - edited by Nomane Bowie July 25 2012
Humanismin business edited by Heikosgitzeck



# பள்ளிப்பருவம்

செல்வன் துரைராசா சங்கஜன்
தரம் 12, கலைப்பிரிவு 2015



பாலகராய் உள்நுழைந்தோம்
பல வருடங்கள் முன்
இரைதேடும் குருவிகளாய்
இணைந்திருந்தோம் இன்றளவும்

ஈன்றெடுத்த அன்னை பள்ளியனுப்ப
அரவணைத்து அறிவூட்டும் ஆசான்கள்
ஏணியாய் நின்று எம்மை ஏற்றிடுவர்
எம் எதிர்காலம் என்றென்றும் ஒளிபெறவே

இத்தனை காலமும் எம்வாழ்வில்
இனிய கடமை பள்ளி வருவது
அத்தனை அனுபவம் வாழ்க்கைக்கு
கற்றுத் தந்தது இந்தப் பள்ளி


அறிவாற்றலொடு நற்பண்புகளும்
கற்றுத் தந்த திந்தக் கலைக்கூடம்
அறியாப் பருவத் துடுக்கடக்கி நன்
நெறியோடு வாழவழி காட்டிய சாலை

நட்பின் விந்தைகளும் வாழும் வழிகளும்
பட்டம் பதவிகளுக்கான அடித்தளமும்
விதம் விதமாய் விருப்புடனே
வித்திடப்பட்டதும் இப் பருத்தில் தான்

சிட்டுக் குருவிகளாய் சிறகடித்து
ஆசான்களின் அறிவூட்டலின் வழிநடந்து
பெற்றோரின் அரவணைப்பில் திழைத்து
நண்பருடன் கூடிக்குலாவிய பருவம்

நம் உள்ளம் இன்புற்ற
நிகழ்வுகள் எத்தனை எத்தனை
இனியொரு முறை கிடைக்காதா
இம் மகிழ்ச்சி நம் வாழ்வில்

அழியாத காவியமாய்
எப்பொழுதும் எம் மனதில்
பதிந்து நிற்கும் பள்ளிக்காலம்
பழுதற்ற எம்வாழ்வின் பொற்காலம்





# Electronic commerce in modern Global Marketing Trend

**K.Maatheepan**
(HNDM)

**Introduction**

Electronic Commerce means. It is the pre - eminent buzzword of online revolution. It can be described simply as "Doing business electronically" It captures the excitement and focus of this fast emerging market. E.Commerce will be the back bone of the new global economy in this century, a market place which can be entered from anywhere which can take its users anywhere, which can give access to an unimaginably diverse range of products and Services.

The Internet has contributed largely to the involvement of e-commerce in its present form and is accepted largely to the involvements of e-commerce in its present from I is accepted today as an essential feature in an E.commerce environment.

E.commerce is a business strategy and uses technology to achieve business objectives. If improves external business relationships and an evolution in the way companies interacts. E.commerce provides information to facilitate delivery of goods and services and supports change initiatives and reinforce business prouss re - engineering.

Electronic commerce can be categorized into three areas, Business - to - Business, Business to consumer I Business to Government E-commerce. Although business to consumer E.commerce is much talked about, business to business and business to government are much larger than business to consumer e-commerce.

It is basically selling goods and trade services online over the Internet. B2B E.commerce on the other hand involves supply chain integration and management and formation of strategic alliances. B2G E.commerce involves government tendering and procurement and trade procedures such as customs.

## Advantages Of E.commerce

It is fast becoming advantageous for both the vendor and consumer in today's fast moving and electroni-cally is connected world. For many business, E.commerce is becoming the only option as companies become more and more interested in expanding their operations online. It includes the ability to expand into global markets with a minimum of expenses. It decreases the cost of creating processing, distributing, storing and retrieving paper - based information.

E.commerce greatly enhances the speed at which transactions are completed. Minimization of time spend in communicating, exchanging information and documents results in increased efficiency in markets. At the same time trading in an electronic environment necessitates market players to be more efficient in all their activities such as decision marking promofional activities and implementation of new strategies in order to have their waves read to meet new demand.

The value -added created through E.commerce and the internet, and the indirect effects on other sectors are likely to generate much new employment. In the united states, Internet - related employment reached almost 400,00 in 1998.

Let's improve our Information Technology (IT) I English knowledges to face global environment successfully.

**தற்புகழ்ச்சி**

தற்புகழ்ச்சி செய்து கொள்ளுதல் என்பது முன்னேற்றத்துக்குப் பெரும் தடைகளாக உள்ளவற்றுள் ஒன்று.

உண்மையான முன்னேற்றத்தின்மீது ஆர்வம் இருந்தால் இந்த முட்டாள் தனத்தைக் கவனமாகத் தவிர்க்கவேண்டும்.



# வாசிப்பின் முக்கியத்துவம்

ரட்ணகுமார் கவிஷன்
தரம் 9B

நாங்கள் அறிவைப் பெறுவதற்கு பல்வேறு வழிமுறைகளும் சாதனங்களும் முக்கிய பங்கு வகிக்கின்றன. முறையான பாடசாலைக் கல்வியில் ஆசிரியர்கள் வாய்மொழிமூலம் கற்பிக்கின்றார்கள். மாணவ மாணவிகள் பாடசாலைப் பாடநூல்களையும், துணைப் பாட நூல்களையும் உரிய உபகரணங்களையும் பயன்படுத்துகின்றார்கள்.

பாடசாயில் நேரக்கட்டுப்பாடு, பாடத்திட்டக்கட்டுப்பாடு என்பன போன்ற கட்டுப்பாடுகள் மத்தியிலேதான் கல்வி கற்க வேண்டி உள்ளது. ஆசிரிய வளத்தைக் கூடியளவு பயன்படுத்த இது தவிர்க்க முடியாது. எவ்வளவுதான் தனியாள் வேறுபாடுகளைப் பற்றிப் பேசினாலும் மாணவனுக்கு ஒரு ஆசிரியரையோ, மாணவருக்கு ஒரு புத்தகத்தையோ பயன்படுத்த முடியாது. ஆகவே, பல மாணவர்கள் கற்கும் பாடசாலை ஒன்றில் வகுப்புக்கள், பாடத்திட்டம், பரீட்சைகள், பெறுபேறுகள் என்பன தவிர்க்க முடியாதவை. அத்துடன் மாறிவரும் அரசுகள் தங்கள் கொள்கைகளை கல்வியில் திணிக்க முயல்வதும் கல்விச் சுதந்திரத்துக்கு தடையாக உள்ளது.



எனினும், மாணவ மாணவியார் தம் இளம் வயதில் கூடிய பகுதியைப் பாடசாலையில் கழிக்க நேரிடுவதால் பாடசாலைகளில அவர்களுக்கு வாசிப்பு பழக்கத்தை ஏற்படுத்த வேண்டியுள்ளது. ஆசிரியரது முக்கிய கடமையாக உள்ளது. இன்று எத்தனையோ தகவல் தொடர்பு ஊடகங்கள் வந்து விட்டாலும் அதிக அறிவை வளர்ப்பதில் பத்திரிகை சஞ்சிகை நூல் போன்றன முக்கிய இடம் வகிக்கின்றது.

ஒரு பல்கலைக்கழகப் பட்டம் பெற்றபின் கல்வியை வாசிப்பை நிறுத்திய ஒருவரை விட சாதாரண கல்வியோடு தொடர்ந்து வாசிப்பதில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்களின் அறிவு எத்தனையோ மடங்கு உயர்ந்ததாக இருக்கும். பட்டம் பெற்று தொடர்ந்து அதைப் பயன்படுத்தாவிடில் இருந்த அறிவும் மங்கி இருக்க தொடர்ந்து வாசிக்கும் சாதாரண கல்வி கற்றவரின் அறிவு பலதுறைகளில் சிறந்து விளங்கும் உலகின் தலைசிறந்த எழுத்தாளர்களில் ஒருவரான அமெரிக்க எழுத்தாளர் மார்க்டுவெயின், எழுத்தாளர்களிலேயே மிகவும் குறைந்த கல்வி கற்றவர். மேலும்

உலகில் பல பத்திரிகையாளர் பாடசாலைக் கல்வியில் மிகக் குறைந்தவர்களே. இவர்கள் உயர்நிலையை அடையக் காரணம் அவர்கள் வாசிப்பதில் காட்டிய கூடிய ஆர்வமே ஆகும்.

பாடசாலைக்கு அப்பால் வாசிப்பு எமது அறிவை வளர்ப்பதில் பெரும் பங்க வகிக்கின்றன. நாம் எமது ஓய்வு நேரங்களில் எமக்கு விரும்பிய நூல்களை வாசிக்கலாம். பாடசாலைகளில் போன்று நேரக்கட்டுப்பாடு இல்லை. இலக்கியங்கள் புராணங்களை பொறுத்தவரை ஒரு பகுதியே பாடசாலையில் சில வகுப்புத்திட்டங்களில் சேரக்கபபட்டு இருக்கும். ஆனால் பாடசாலைக்கு வெளியே அவற்றை முழுமையாக வாசித்து அதன் முழுப்பயனை அடையலாம்.

வாசிப்பதால் எமது அறிவு வளர்வதோடு மட்டும் அன்றி, விசாலமுமடைகின்றது. வெவ்வேறு துறைகள் பற்றிய அறிவை நாம் எப்படிப் பெறலாம் என்ற விபரமும் எமக்கு கிடைக்கின்றன. சிக்கலான ஆழமான விடயங்களையும் பத்திரிகைகள் இலகுவான மொழி நடையில் வெளியிடுவதால் பாமரமக்களும் வாசிக்கக்கூடியதாக இருக்கும். வாசிப்புப் பழக்கம் எங்களுக்குப் பயனுள்ள பொழுது போக்காக மாறிவிடும்.

சிறுகதை, கவிதை, நாடகம் எனமொழி தொடர்பான பல துறைகளில் எமது அறிவை வளர்த்துக்கொள்ளலாம். நூல்களிலே ஒவ்வொரு துறைகளிலும் பல்வெறு அறிஞர்களுடைய நூல்கள் இருப்பதால் ஒரு துறைசார்ந்த பல்வேறு தகவல்களை அறிந்து கொள்ளமுடியும். பத்திரிகைகள், சஞ்சிகைகளில் புதிதாகக கண்டு அறியும் அறிவியல் விடயங்கள், உலகில் நடக்கும் அரசியல் சமூக மாற்றங்கள், விளையாட்டு செய்திகள் போன்வற்றை உடனுக்குடன் அறியக்கூடியதாக இருக்கும்.

எல்லாவற்றுக்கும் மேலாக தொடரந்து வாசித்து வருபவர்கள் பல விடயங்களைத் திறனாய்வு செய்யக்கூடியவர்கள் ஆகவும் பத்திரிகை, சஞ்சிகைகளுக்கு எழுதவும், நூல்களைப் படைக்கவும் ஆற்றல் பெற்று விடுகிறார்கள். ஆகவே மாணவராகிய நாம் நேரத்தை வீண் விரயமாக்காமல் எமது வாசிப்பு பழக்கத்தை மேம்படுத்தி வாழ்வில் உயர்வடைய வேண்டும்.



# பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தித்திட்டம் (SBTD)

யோ.விதுாபாகரன் (B.Sc,PGDE)
ஆசிரியர்
யா/வேலாயுதம் மகாவித்தியாலயம்

ஆசிரியர்கள் என்பவர்கள் மாணவர்களின் இடம்சார் பெற்றோர்கள் என்ற சட்டரீதியான யோசனைகளுக்கு அமைய மாணவர்களின் பண்புசார்தரமான கல்விக்கு பொறுப்பாகவுள்ளனர். விருத்தியடைந்துவரும் அறிவுசார் உலகின் தேவைக்குப் பொருத்தமான அறிவாற்றலும் ஆளுமையும் மிக்க சிறந்த சந்ததி ஒன்றினை உருவாக்கும் பொறுப்பு ஆசிரியர்களது. மாறும்உலகிற்குப் பொருத்தமான, ஆக்கபூர்வ மான, சமநிலையான, ஆளுமையுடைய எதிர்காலச் சந்ததியினை உருவாக்குவது ஆசிரியர்களது சீரிய கடமையாகும். இதற்காக நடைமுறை, அறிவுடன் பரிபூரணமான ஆசிரியர் சமூகமொன்று நாட்டிற்கு அவசியமாகிறது, வேண்டப்படுகிறது.

இதற்காக இன்றுவரை பல்வேறுபட்ட ஆசிரிய மேம்பாட்டு வேலைத்திட்டங் கள் நடைமுறையில் உள்ளன. ஆனால் அண்மைக்காலத்தில் வெளிவந்த பல ஆய்வு களும் அறிக்கைகளும் ஆசிரியர் கல்வியிலுள்ள பலவீனங்களையும் பிரச்சனை களையும் சுட்டிக்காட்டியுள்ளன. ஆசிரியர் விருத்திக்காக பல்கலைக்கழகம், தேசிய கல்வி நிருவகம், தேசியகல்விக்கல்லூரிகள், ஆசிரியர் கல்லூரிகள, ஆகிய மத்திய நிலையம் மற்றும் வேறு அரச தனியார் நிறுவனங்கள் மூலமாக தற்போது நடைமுறை யில் வழங்கிவரும் பல்வேறு ஆசிரியர் விருத்திக்கான கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் வகுப்பறையில் பிரயோகிக்க முடியாததாகவும் பாடசாலையின் தேவையுடன் நேரடி யாகத் தொடர்புபடத் தவறியுள்ளனவாகவும் ஏன் அவை ஆசிரியர்களது சொந்த விருத் திக்கே பொருத்தமற்றதாகவுள்ளதுடன் அது ஏட்டுக்கல்வியாக உள்ளது.

ஆசிரியர் விருத்திக்கான ஆசிரியர் கல்வி என்பது "ஆசிரியர்களை கற்கை நெறிகளை மேற்கொள்வது, கோட்பாடு, அறிவு என்பவற்றை கற்பது ஏன்? வரையறை குட்பட்டதன்று. பாடசாலைக்கும் தனிப்பட்டவர்களுக்கும் பெரிதும் பயனளிக்கக் கூடிய தும் தனது வகிபாகத்தையும் பணிகளையும் பாடசாலையினுள் மேற்கொள்ளக் கூடியதுமான தேர்ச்சி மட்ட அணுகுமுறையான்றே ஆசிரியர் கல்வியாகும்" தகவல் தொழில்நுட்பவியல் புரட்சி, பூகோளமயமாக்கம் போன்றவை காரணமாக தோன்றியுள்ள புதிய பிரச்சினைகளை முகங்கொடுப்பதற்கான ஏற்பாடுகளையும் ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித்திட்டம் கொண்டிருக்கவேண்டும். மேலும் குழுவாக செயற்படல், பகிர்ந்து கொள்ளுதல், புத்தாக்கம், ஆய்வுகளை மேற்கொள்ளல் போன்றவற்றையும் ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித்திட்டம் கொண்டிருக்கவேண்டும். எனினும் அவ்வாறு ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள் அமையவில்லை.

எனவே வலுவாக்கப்பட வேண்டிய ஆசிரியர் மேம்பாட்டு தேவையினை அடையும் ஒரு முயற்சியாக 2009 ஆம் ஆண்டு புதிய கல்வி சட்டக முன்மொழிவுக்கு அமைய கல்வி அமைச்சின் துறைசார் விருத்திச் சட்டக செயற்திட்டத்தின் கீழ் இயங்கும் TESP வேலைத்திட்டத்தினால் பாடசாலை மட்ட ஆசிரியர் விருத்தி வேலைத்திட்டம் (SBTD) உருவாக்கப்பட்டு அமிழ்ப்படுத்தப்படுகிறது.

பாடசாலைமட்ட ஆசிரியர் விருத்தி வேலைத்திட்டம் என்பது மாணவர்களின் அடைவுமட்ட உயர்வு மற்றும் ஆளுமை விருத்திக்கு வழிகாட்டக்கூடிய பொறுப்பு மிக்க ஆசிரியர்களை உருவாக்குவதற்காக பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தித் தேவைகளை இனங்காணல், திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தல் எனும் செயற் பாடுகளை உள்ளடக்கியதான ஆசிரியர் விருத்திச் செயற்பாடுகளை பாடசாலைகளில் செயற்படுத்தலானது பாடசாலை மட்ட ஆசிரியர் மேம்பாட்டு வேலைத்திட்டம் எனப் படும். இவ்வேலைத்திட்டமானது ஆசிரியர்கள் தனித்தனியாகவே, குழுக்களாகவோ சுயமாக முன்வந்து தமக்குள் மாற்றத்தை ஏற்படுத்துவதுடன் ஏனையோரையும் மாற்றி விளைததிறன, வினைதிறன் மிக்க பாடசாலை சமூகத்தை உருவாக்குவர்.

பாடசாலை மட்ட ஆசிரியர் விருத்தி தொடர்பாக பாடசாலை மேமபாட்டு நிகழ்ச்சித்திட்டம் (PSI) ஆனது பின்வருமாறு கூறுகிறது. "ஆசிரியர் அபிவிருத்தி செயன்முறையானது எல்லா மட்டங்களிலும் முகாமைத்துவ பொறுப்புக்களை ஒவ் வொருவரும் பகிர்ந்து கொள்வதையும், தேவையான போது தீர்மானம மேற்கொள்ளலில் உரிய தனிநபர்களை இணைத்துக்கொள்வதையும் உள்ளடக்கியது. இது சிறந்த ஆற்றுகையாளருக்கு உயர் வெகுமதியை கொண்டு வருவதை உறுதிப்படுத்தும். இந்த வெகுமதிகள் ஒருவரில் ஒருவர் தங்கியிருத்தல், உயர்பங்குபற்றல், அதிகரித்த மனவுறுதி நிறுவகத்திற்குச் சொந்தமானவர் என்ற உணர்வு என்பவற்றை உள்ளடக்கிய தாகும். மேலும் குறித்த பணியைச் செய்வதற்க தனிநபரை தயார்ப்படுத்தல் மற்றும் தனிநபர் தனது ஆற்றல், தொழில் இரண்டிலும், விருத்தி அடைவதற்கான சந்தர்ப்பங் களை தொடர்ச்சியாக வழங்குதல்" என்பவற்றை உள்ளடக்கியதாகும் என கூறுகிறது.

இவ்வகையில் பாடசாலைமட்ட ஆசிரியர் விருத்தி வேலைத்திட்டத்தின் அவசியம் பின்வரும் காரணிகளால் வலியுறுத்தப்படுகிறது.

- பிறரால் திட்டமிடப்பட்ட பாரம்பரியமான ஆசிரிய கல்விச்செயற்பாடுகளை விட பாடசாலைகளால் இனங்காணப்பட்ட தமது தேவைகளுக்கு பொருத்த மான வேலைத்திட்டங்கள் பாடசாலைகளாலேயே நடைமுறைப்படுத்தப்படு வதன் மூலம் உயர் அடைவுகள் எட்டப்படலாம் என எதிர்பார்க்கப்படு கின்றது.
- தமது வேலைத்திட்டமென்ற உணர்வானது ஆசிரியர்களின் ஆக்கபூர்வ மான பங்களிப்பு கிடைக்க வாய்ப்பாயமையும்.
- பாடசாலைகளின் பௌதீக மற்றும் ஏனைய வசதி வாய்ப்புகளுக்கமைவாய்

நடைமுறைப்படுத்தப்படம் விசேட வேலைத்திட்டங்கள் பயன்மிக்கதாகக் காணப்படும்.

* வேலைத்திட்டங்களின் விளைவுகளை நேரடியாகக் கண்டுகொள்ள முடியும்.
* ஆசிரிய விருத்திமூலமான மாணவர்களின் அடைவு மேம்பாட்டுக்கான இவ்வேலைத்திட்டங்கள் பாடசாலைச் செயற்பாடு இடம்பெறும் நேரத்திலேயே நடைபெறுவதனால் நேரமும் வளங்களும் சிறந்த முறையில் பயன்படுத்தப்படும்.
* ஆசிரியர்கள் தமக்கிடையே வாண்மை விருத்தி தொடர்பான கருத்துப் பரிமாற்றங்கள் செய்யவும் இடைத் தொடர்புகளை வளர்த்துக் கொள்ளவும் உதவும்.
* பாடசாலைகள் சுயவிருத்திக்கான ஆற்றலைப் பெற பயிற்சியும் சந்தர்ப்பமும் கிடைக்கும்.

இவற்றுக்கூடாக பாடசாலை மட்ட ஆசிரியர் விருத்திக்கூடாக அடையப்படும் நோக்கமானது பின்வருமாறு.

* ஒவ்வொரு பாடசாயையும் அத்தியாவசியமானதும் பொருத்தமானதுமான ஆசிரியர் விருத்தி வேலைத்திட்டத்தை தாமகவே திட்டமிட்டு நடை முறைப்படுத்தும் ஆற்றலுள்ளதாக வலுப்படுத்தல்.
* மாணவர்களின் அமைவுமட்ட மேம்பாட்டுக்கான தொடருறு ஆசிரியர் கல்வி வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படல்
* ஆசிரியர்களிடையே சிறந்த நடைமுறைகள் தொடர்பான அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளல் மற்றும் பிரதிபலித்துக் கற்கும் தேர்ச்சியை மேம்படுத்தல்
* தொடருறு ஆசிரியர் கல்வி வேலைத்திட்டங்கள் மூலமாக பாடசாலை முறைமையில் பண்புத்தர விருத்தியை ஏற்படுத்தல் போன்றன எதிர்பார்க்கப்படுகிறது.

பாடசாலைகள் தமது பாடசாலை மட்ட ஆசிரியர் விருத்திக்காக செயற்பாடுகள் பொருத்தமானதாக இருப்பதை பாடசாலை அதிபரும் முகாமைத்துவகுழுவும் கண்காணித்து ஒவ்வொரு தவணை இறுதியிலும் தமமு மதிப்பீட்டறிக்கையை தயார்ப்படுத்தல் உகந்ததாகும்.

இந்தவகையில் அறிவுசார் உலகை எதிர்கொள்வதற்கு தரமான கல்வியின் தேவை உணரப்பட்ட இந்நிலையில் மாணவர்களை வழிகாட்டும் ஆசிரியர்கள் தற்கால அறிவை இற்றைப்படத்தல் மிக அவசியமாகவுள்ளது. தனது மாணவனின் தேவை என்ன? பாடசாலை என்ன எதிர்பார்க்கிறது இவற்றை நிறைவேற்ற ஆசிரியரான எனக்கு எது இடர்பாடாக உள்ளது? அதை எவ்வாறு அகற்றலாம்? என்பதை ஆசிரியரே அறிவர். எனவே இதற்கு பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி வேலைத்திட்டம் உதவும் என எண்ணுவோம்.



# My Country

**Sivapatham Siththiravadevel Paran**
**Grade:- 09A**

01. Sri Lanka is my country
02. It's a beautiful nation
03. It is a small is land
04. It is a mango shaped country
05. It is in the Indian Ocean
06. It is in the South - East of India
07. It is an agricultural country
08. It is a developing Country
09. It is a tropical country
10. It is called the "pearl of the Indian Ocean"
11. It has dry and hot and wet climate
12. It has beautiful rivers, water - Falls, mountains and rocks
13. It is more than with 8 millions of people
14. Sri Lanka has good sea - food resources
15. It has acres of tea and rubber estates
16. Coconut products and gems have great demand in our country
17. Our country has a natural harbour in Trincomalee
18. Our Country is a multi- religicus country
19. It is a multi racial country
20. Sri Lanka has nine provinces
21. It has Zoological garden and Botanical garden
22. It has sanctuaries for birds
23. Kumana and wilpattu are the famous sanctuaries
24. Sri Jaya warda napura kotte is the present capital of our country
25. I am avery good citizen of my courntry and I feel proud to say that I am a Sri Lankan.



# இயற்கைச் சமநிலை பேணுவோம்.

விஸ்ணுகுமார் தர்மிசன்
தரம் 7B

இயற்கையினை நீ வாழ்வித்தாய்
இயற்கையும் உனை வாழ்விக்கும்
செயற்கை உரங்களை பாவித்தால்
இயல்பு வாழ்க்கை பாதிக்கும்

உடல் நலமும் கெட்டழியும்
நோய்கள் பல வந்துசேரும்
நில வளமும் நுண்ணங்கி பேன்ற
பல வளமும் அற்றுவிடும்

மரங்களைத் தறித்து வீடு வாசல்
கட்டிடங்கள் வீதிப் போக்குவரத்து
தொழிற்சாலைகள் பெருக்குவதால்
மழைவளமுங் குன்றிடுமே



தாவரங்களிருப்பதாலே பூமியில்
உயிர்வாழ்க்கை உயிர்வாயு
தனைத் தந்து உயிர் வாழ
வழி சமைக்கும் தாவரத்தை அழியாதீர்

பொலித்தீன் பிளாஸ்ரிக் பாவனையை
இல்லாதொழித்திடுவீர் இடும்பையை
தவிர்த்தே வாழ்ந்திடுவீர்
புவிச் சமநிலையைப் பேணிடுவீர்

தொழிற்சாலைக் கழிவுகளை நஞ்சகற்றி
குழிகளிலே புதைத்திடுவீர்
நதிகளிலே கொட்டாதீர் நல்
விதி சமைப்பீர் வாழ்ந்திடுவீர் நிறைவாக

பூமித்தாயை பாதுகாப்போம்
மரம் வளர்ப்போம் பசுமை பேணுவோம்
நம் வாழ்வை பசுமையாக்கும் மழைதருவாள்
வளம் தருவாள் நிறை வாழ்வளிப்பாள்.

களனிகளாக்குவோம் தொழிற்சாலைகள்
உருவாக்கிடுவோம் நற்சேவைத்துறைகள்
பெருக்கி அறிவாற்றல் மிக்க சமுதாயத்தை
உருவாக்கி நாட்டு நலம் பெருக்கிடுவோம் வருக.

## சிந்தனைக்கு...

- நீதியான இலட்சியத்தைக் கொண்ட முயற்சி ஒருபோதும் தோல்வி யடையாது
- எங்களுக்கு தூய உள்ளத்தால் கூறிய சொல் என்றும் வீணாகாது
- நாம் முயற்சிப்போம் பயனை இறைவன் கையில் விட்டுவிடுவோம்
- மனிதன் தன்னைத் தானே எவ்வண்ணம் ஏமாற்றிக் கொள்கிறான் என்பதை ஒவ்வொரு கணமும் தான் அவதானித்து வருகின்றான்
- என் வாழ்க்கையில் ஒவ்வொரு கணமும் இறைவன் சந்நிதானத்தில் இருப்பதாக நான் உணர்கிறேன்.



# விடியலை நோக்கிய பயணம்

சூ.ஜெனிக்நாதன்
தரம் - 11B

காலங்கள் பல கடந்து சென்றாலும்
கலைந்து போகாதது
விடியல் எனும் சுதந்திரம்
விடியலை நேக்கிய எம் பயணம் முடிந்து விடாது



பல உயிரினங்கள் இறந்து போனாலும்
பல உள்ளங்களின் உணர்ச்சிக் குரல் மாறாது
அறியாமை எனும் இருளில் வாழ்ந்த மனிதர்கள்
அறிவியல் எனும் ஒளியில் பிரகாசிக்க வேண்டும்.

ஆயிர் கவிப்பாவை எழுதினாலும் - இது
அர்த்தமுள்ள கவிப்பாவையாக அமையவேண்டும்
காலத்தின் விதியாக வந்த போராட்டம்
கால மாற்றத்தின் காரணமாக ஓய்ந்து விட்டது

பயணத்தின் பாதைக் கோலங்கள்
பரந்ததாக எம் மண்ணில் பூக்கவேண்டும்
மாறாட்ட சூழ்நிலை காரணமாக
மரத்தின் விழுதுகள் போல் காட்சியளிக்க வேண்டும்

**கடவுளின் உதவி வேண்டுமா?**

கடவுளின் உதவியானது எப்போதும் இருக்கிறது நீ தான் உன்னுடைய,ஏற்றுக்கொள்ளக்கூடிய திறனை உயிர்துடிப்புடன் வைத்துக் கொள்ளவேண்டும். எந்த மனிதனாலும் ஏற்றுக்கொள்ளக்கூடியதையும் விட மிக அதிக அளவிலே கடவுளின் உதவி இருக்கிறது.




# மரம் வளர்ப்போம்

இ.முரளிஹரன்
கலைப்பிரிவு (2015 A/L)

பூமா தேவியவள் பூந்தளிர் மேனி யதின்
செல்வமாம் அவள் கொண்ட செழிப்பான இளந்தளிரை
தேமதுரமாய் தென்றல் தரும் அவள் செந்தளிர் மூச்சினை
ஓயாது தறித்தழித்து ஓலமிட வைக்கின்றீர் மானிடரே

தானழிந்து போனாலும் தளிர்மேனி நொந்தாலும்
மனமற்ற மனிதனுக்காய் மரிக்கின்றான் மனதுள்ளே
தானம்தான் கேட்டாளா அன்றின் உயிர்தான் கேட்டளா
வானம் பொழிந்துன்னை காத்திடத்தான் கேட்கின்றாள்.

பூமித்தாய் மேனியினை நீ வெட்டி சாய்க்கின்றாய் - அவள்
சாமியிடம் முறையிட்டு அழும் ஓசை கேட்கிறதா
மௌனமாய் அவள் வடிக்கும் மானசீகக் கண்ணீரோ
மானிடனே அது உனக்காய் அவள் வடிக்கும் செந்நீரே



காதிருந்தும் செவிடர்களாய் கண்ணிருந்தும் குருடர்களாய்
அறிவிருந்தும் ஜடங்களாய் வீணரய் மாறினீரே
மாசற்ற மண்ணின்தாய் கேட்கின்றாள் மண்காக்க
பேச்சற்றுத் தறிக்கின்றீர் கேட்க வாய் இல்லையென்றா

நண்பனாய் சகோதரனாய் நற்றவ உறவுகளாய்
உன் உயிர் காக்கும் வைத்தியனாய் - நீர் வாழ
வழி செய்யும் புவித்தாயின் ஆடை களையாதீர் - மானிடரே
பாடையிலே நீர் போக தேடாதீர் வழிதன்னை

பிஞ்சும் பூவுமாய் பூரித்தெழும் தாய்ச்சிறகை
வெஞ்சமாய் ஒடித் தழித்து பஞ்சத்தில் விழாதீர்
பக்குவமாய் வளர்ந்திடுவீர் பாரிய காடுகளை
வளர்த்திடுவீர் வளமாக வாழ்ந்திடுவீர் நலமாக



# இசைத்துறையின் சாதனையாளர்

ஜெயச்சந்திரன் சஞ்சிகன்
வர்த்தகப்பிரிவு (2015 A/L)

தனது அதிரடி இசையால் நம் உள்ளங்களை கவர்நதவர் A.R ரஹ்மான் ஸ்லாம்டாக் மில்லியனர் என்ற திரைப்படத்திற்கு இசையமைத்ததன் மூலம் புகழின் உச்சிக்கே அண்மைக் காலமாக சென்றுகொண்டிருக்கின்றார். நமது இசைசப்புயல் இருப்பினும் நமக்கெல்லாம் ஒஸ்கார் வென்று சதித்துக்காட்டியவர். A.R ரஹ்மானைத் தான் தெரியும். ஆனால் இதை அடைய அவர் எதிர்கொண்ட சவால்கள், அவமானங் கள் சிறுபராயத்திலேயே அவர் எதிர்கொண்ட பிரச்சினைகள் என்பவை நம்மவர்களில் பலருக்குத் தெரியாது

இசைப்புயல் A.R ரஹ்மானின் உண்மையான பெயர் திலீப் என்பதாகும். இதுதான் பெற்றோர் இவருக்கு சூட்டிய பெயராகும். திலீப்பின் அப்பா R.K சேகர் ஒரு பிரபலமான இசையமைப்பாளர் ஆவார். மிகவும் பிஸியான மியூசிக் டைரக்டர். தனது திறமையினால் குறுகிய காலத்திலேயே அசுர வளர்ச்சி கண்டர் R.K சேகர். சிறுவயதில் தகப்பனார் மியூசிக் டைரக்டர் என்பதால் திலீப்பிற்கு இசையில் ஆர்வம் ஏற்பட்டது. இதனால் தீலிப்பிற்கு படிப்பில் ஆர்வம் குறைந்தது. வகுப்பில் அநாவசியமாகப் பேசமாட்டான். கலாட்டா எதுவும் செய்யமாட்டான். ஆரம்பத்தில் ஹார்மோனியம், ஹீபோர்ட் எனத் தான் தகப்பனாரிடம் கற்றுக்கொண்டவற்றை பள்ளியில் அரங்கேற்றிய இவன் சில நாட்களிலேயே பள்ளியின் "ஸ்ரார்"ஆகிவிட்டான். ஆசிரியர்கள் எழுதிய குட்டிக் குட்டிப் பாடல்களுக்கெல்லாம் இசையமைத்து அசத்தினான் திலீப், R.K. சேகர் தனது மகனின் இசைத் திறமையைக் கண்டு பெருமை கொள்வார். ஆனால் ஒருநாளும் இசைத்துறைக்கு வருமாறு திலீப்பை வற்புறுத்தவில்லை.

சேகர் இவ்வாறு நினைத்தாலும் அவருக்கு விதி விளையாட ஆரம்பித்தது. ஆரம்பத்தில் வயிற்றில் சிறிய பிரச்சினை என நினைத்த சேகர், பின்னாளில் கண்டுபிடிக்கப்படாத புற்றுநோய் காரணமாக 1977 ம் ஆண்டில் இறந்தார். சேகர் மரணமடைந்த போது திலீப்பிற்கு வயது பதினொன்று. சேகர் இறந்ததும் குடும்பத்திற்கு வருமானம் வராமல் போனது. இதனால் திலீப்பின் அம்மாவின் வேண்டுகோளுக்கிணங்க திலீப் இசைத்துறையில் தீவிர கவனம் செலுத்த தொடங்கினான். அதுவரை பொழுதுபோக்கிற்காக இசையில் ஆர்வம் காட்டிய திலீப் இப்போது தொழிலுக்காக இசையில் ஆர்வம் காட்டத் தொடங்கினான்.

தீலிப் தகப்பனின் இசைக் கருவிகளை வாடகைக்கு விட்டு அதில் வரும் வருமானம் மூலம் வாழ்க்கை நடந்தது. பின்னர் இசைக் கருவிகள் வாடகைக்கும் செல்லும் இடமெல்லாம் சென்று திலீப்பும் வாசிக்க ஆரம்பித்தான். அப்பொழுதுதான் திலீப்பின் திறமை உலகிற்குத் தெரிய ஆரம்பித்தது. இதனால் பல வாய்ப்புக்கள் திலீப்ப தேடி வர ஆரம்பித்தன. திலீப்பிற்கு விளம்பரப்படங்களிலிருந்து வாய்ப்புக்கள் வர ஆரம்பித்தன. கிடைத்த வாய்ப்பை அருமையாகப் பயன்படுத்திக்கொண்ட திலீப் தனது திறமையைக் காட்டினான். திலீப்பினுடைய விளம்பரங்கள் பிரபல்யம் அடையத் தொடங்கவும் பல புதிய தயாரிப்பாளர்கள் அவரைத் தேடி வந்தார்கள். பத்தாயிரம், பதினைந்தாயிரம் என்று சம்பளம் குவிந்தது. ஒரு முறை இளையராஜாவிடம் ஹீபோர்ட் வாசிக்க திலீப்பிற்கு வாய்ப்புக் கிடைத்தது. அன்று தான் திலீப்பின் வாழ்வின் திருப்புமுனை. இளையராஜா திலீப்பின் திறமையைக் கண்டு வியந்தார். பல இடங்ளில் திலீப்பைப் பராட்டினார். திலீப்பிற்கு இசைத்துறையில் பல நுணுக்கங்களை சொல்லிக் கொடுத்தார். இவ்வாறு பல வழிகளிலும் வளர்ச்சியடைத் தொடங்கியது திலீப்பின் வாழ்வு.

படிப்படியாக இசைத்துறையில் வளர்ச்சியடைந்த A.R ரஹ்மான் மணிரத்தினத்தின் "றோஜா" திரைப்படத்தின் மூலம் இசையமைப்பாளரானார். அன்றுதான் அவரின் கனவு நனைவாகியது. றோஜா திரைப்படத்தின் வழமையான தமிழ் சினிமா பாணியை விட்டுவிட்டு புதுவிதமான பாடல்களை உருவாக்கினார். A.R ரஹ்மான் மக்கள் மத்தியில் அவை மிகுந்த வரவேற்பைப் பெற்றன. தன்னுடைய முதல் படத்திலேயே தனது திறமையை நிருபித்த A.R ரஹ்மானுக்கு இந்திய அரசு "தேசிய விருது" கொடுத்து கௌரவித்தது. இப்படத்தில் இடம்பெற்ற "காதல் ரோஜாவே" பாடல் மகத்தான வரவேற்பைப் பெற்றது.

இதனால் ரஹ்மானைத் தேடிப் பல வாய்ப்புக்கள் வர ஆரம்பத்தன. ஜென்டில் மேன், மின்சாரக்கனவு போன்ற படங்களில் புதிய விதத்தில் இசையமைத்தார். ரஹ்மான் மின்சாரக்கனவு திரைப்படம் மூலம் மீண்டும் ஒரு முறை விருது பெற்றார். A.R ரஹ்மான், ஜீன்ஸ், முதல்வன் போன்ற படங்களிலும் இந்தியன்3, காதலர் தினம் போன்ற படங்களிலும் இடம்பெற்ற பாடல்கள் படிப்படியாக முன்னேறி அசுர வளர்ச்சி காண ஆரம்பித்தார். A.R ரஹ்மான். கிடைத்த வாய்ப்புக்களை சரியாகப் பயன்படுத்திக் கொண்ட ரஹ்மான் ரசிகர்கள் பலரை கட்டித் தன் பக்கம் ஈர்த்தார். எங்கும் ரஹ்மான் தீ பரவத் தொடங்கியது. தமிழ் மட்டுமல்லாது ஹிந்தி, தெலுங்கு மொழிகளிலும் பல படங்களுக்கு இசையமைத்தார் A.R ரஹ்மான். அங்கும் அவருக்கு நல்வரவேற்புக் கிடைத்தது.

ரஹ்மானால் அறிமுகப்படுத்தப்பட்ட பாடகர்கள் பலர் இன்று வெற்றிக் கொடி கட்டிப் பறக்கின்றனர். அவர்களுள் சுரேஷ், பீட்டர்ஸ், ஸ்ரீனிவாஸ், ஹாரிணி, கார்த்திக், அனுராதா ஸ்ரீராம், ஜீ.வி.பிரகாஷ்குமார், உன்னிக் கிருஸ்ணன், நித்தியஸ்ரீ, முருகேஷ்,

அனுபாமா, ஆகியோரும் அடங்குவர். இது தவிர ஹரிகரன் சாதனா சர்க்கம், சுஜாதா, மின்மினி, உன்னிமேனன், சங்கர், மகாதேவன், கே.கே உள்ளிட்ட பாடகர்கள தமிழிற்கு கொண்டு வந்ததும் இவரே.

ஹிந்தியில் வெளியான ஸ்லாம்டாக் மில்லியனர் திரைப்படத்திற்கு இசையமைத்தார் ரஹ்மான். இந்த திரைப்படத்திற்காக உலக அளவில் மிகப்பிரபலமான "ஒஸ்கார்" விருதை சிறந்த இசையமைப்பாளர் பிரிவிலும் சிறந்த பாடல் (ஜெய்கோ) பிரிவிலும் ஆக இரு ஒஸ்கார் விருதுகளைப் பெற்று ஒஸ்கர் விருது பெற்ற முதல் தமிழன் என்ற சாதனையைப் படைத்துள்ளார். அந்த வகையில் A.R. ரஹ்மான் தமிழிற்கும் பெருமை சேர்த்துள்ளார்.

# ஆரோக்கிய சபதம்

1. எனது உடல் உள ஆரோக்கியத்தின் முக்கியத்துவத்தை நான் நன்கறிவேன்
2. எனது உயரத்திற்கேற்ப நிறையை எப்போதும் பேணுவேன்
3. தினமும் ஆகக் குறைந்தது 30 நிமிடங்களேனும் உடற்பயிற்சி செய்வேன்
4. எனது உணவில் சீனி, உப்பு, கொழுப்பு போன்றவற்றை இயன்றளவு குறைப்பேன்
5. மரக்கறிகள், பழங்களை தாராளமாக உணவில் சேர்த்துக் கொள்வேன்
6. சுத்திகரிக்கப்பட்ட சுத்தமான நீரையே எப்போதும் பருகுவேன்
7. மதுபானம், புகையிலை சார் பொருட்களை எனது வாழ்வில் முற்றாக தவிர்ப்பேன்.
8. எனது உள ஆரோக்கிய மேம்பாட்டிற்காக தினமும் தியானம், இறைவழிபாடுகளில் ஈடுபடுவேன்
9. மூன்று மாதத்திற்கு ஒரு தடவை மருத்துவப் பரிசோதனை செய்து எனது உடல்நிலையை சீராகப் பேணுவேன்.
10. மற்றவர்களுடன் தொடர்புகொள்ளும்போது சந்தோசமாகவும் மகிழ்ச்சியாகவும் உரையாடி நாங்கள் மட்டுமல்லாது எங்களை சூழ உள்ளவர்களையும் சந்தோசப்படுத்தி வாழ செயற்படுவோம்.



# நிலைத்திருக்கக்கூடிய பொருளாதார வளர்ச்சிக்கான தேர்ச்சிகளில் மனிதமூலதனத்தை மேம்படுத்துவதற்கான உபாயங்கள்

ஆசிரியர் செல்வி வி.இராசரத்தினம்
(B.A. PGDE)

எமது நாடு எதிர்காலத்தில் அபிவிருத்தி அடைந்த நாடாக திகழ்வதற்கு தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தி (தலா - வருமானம்) 2016 ஆம் ஆண்டிற்குள் ஐக்கிய அமெரிக்க டொலர் 4000ஐ அடைந்து கொள்வதற்காக தற்போதைய அரசாங்கம் ஐந்து மையக் கோட்பாடுகளை முன்வைத்துள்ளது.

1. கடல்போக்குவரத்து
2. வான் போக்குவரத்து
3. வர்த்தகம்
4. வலு மற்றும் அறிவு
5. சுற்றுலாத்துறை

போன்ற துறைகளை உள்ளடக்கியுள்ளது. இவை துறை ரீதியான மேம்பாடு, உற்பத்திக் கட்டமைப்பை விரிவாக்குவதுடன் பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதனூடாக இலங்கை நடுத்தர வருமானம் பெறும் நாடுகளின் நிலையை அடையலாம்.

நீடித்து நிலைத்திருக்கும் பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கு அரசாங்கத்தினால் பின்வரும் செயற்பாடுகளை எடுப்பது அவசியமாகின்றது.

1. வருமான ஏற்றத்தாழ்வைக் குறைத்தல்
2. பொருளாதார உறுதியைப் பேணுதல்
3. உயர்மட்ட முதலீட்டை அடைதல்
4. உற்பத்தித்திறனை மேம்படுத்தல்
5. தேர்ச்சிகளை முன்னேற்றுதல்
6. மனித மூலதனத்தின் தரத்தை அதிகரித்தல்

இதனடிப்படையில் உயர்வருமான மட்டங்களை அடைவதில் மனித மூலதனம் முக்கியம் வாய்ந்ததாகவுள்ளது.

மனித மூலதனம் என்பது தனிநபர், வேலையாட்கள் கல்வி மற்றும் பயிற்சியினூடாகப் பெற்ற அறிவு, திறன்கள், நிபுணத்துவம் மற்றும் சமூக ஆளுமையின்

மொத்த அளவாகும். இம் மனித மூலதனத்தின் முக்கியத்துவம் பல்வேறு ஆய்வுகளிலிருந்து இனங் காணப்பட்டுள்ளது.

1. உயர்தரமுடைய மனித மூலதனம் பொருளாதார வளர்ச்சியை விரைவு படுத்துவதுடன் நிலைத்து நிற்கும் அபிவிருத்தியை எட்டுவதில் உயர் பங்கு வகித்தல். இதனூடாக இரண்டாம் தரக்கல்வி, பல்கலைக்கழகம் அதற்கு கூடிய கல்வியின் பங்கு குடித்தொகையில் அதிகரிக்கும்போது பொருளாதார வளர்ச்சி மெதுவடைதல் குறைக்கப்படும். ஆய்வுகளிலிருந்து தரமுடைய மனிதமூலதனக் குறைவு மலேசியா, தாய்லாந்து போன்ற நாடுகள் நடுத்தர வருமானமுள்ள நாடுகளிலிருந்து மீளமுடியாமையையும், இரண்டாம் நிலைக் கல்வியின் விரைந்த விரிவாக்கம் கொரியா நடுத்தர வருமானத்திலிருந்து உயர்வருமான நிலையை எய்தியதையும் கண்டறியப்பட்டுள்ளது.

2. உயர் தேர்ச்சிகள் நவீன பாணிகள் துறையின் விரிவாக்கமத்தை ஊக்குவிக்கின்றது. உலகளாவிய ரீதியில் கல்வி மற்றும் பணிகள் அபிவிருத்திக்கிடையே சாதகமான தொடர்பு காணப்படுகின்றது.

3. தேர்ச்சிகள் பொருளாதார செயற்பாடுகளின் வினைத்திறனை மேம்படுத்து கின்றது. தேர்ச்சியின்மை பல வழிகளில் பொருளாதார செயற்பாட்டைப் பாதிக்கின்றது. உற்பத்தித்திறன் இழப்பு, பயன்படுத்தப்படாத மூலதாரம், அதிகரித்துச் செல்லும் கூலி செலவுகள், கூடியளவில் தொழிலுக்கமர்த்தல், புதிய பணியாளரின் பயிற்சிச் செலவுகள் போன்றவற்றால் வியாபார வினைத்திறன் பாதிப்படைவதால் கைத்தொழில்கள் மட்டுமன்றி முழுப் பொருளாதாரமும் பாதிக்கப்படும்.

இவ்வாறான மனித மூலதனத்தை உயர்தரத்தில் வைத்திருப்பதற்கான வழி களாக பின்வருவன கண்டறியப்பட்டுள்ளன.

i. கல்விச் சீர்திருத்தங்களை வழிகாட்டும் கொள்கையாக கூடிய போட்டித் தன்மை வாய்ந்த கல்விச் சந்தை வசதிகள் இருக்கவேண்டும்.

ii. முதல்நிலை, இரண்டாம் நிலைக் கல்வியில் முதலிடுவதுடன் ஆசிய பல்கலைக்கழகங்கள் நவீன பணிகள், கைத்தொழில்களுக்குத் தேவைப்படும் பலமான தேர்ச்சிகள், தராதரங்களைக் கொண்ட போதிய பட்டதாரிகளை உருவாக்கல்

iii. தேர்ச்சிகளின் வழங்கலை மட்டுப்படுத்தும் தடைகளை நீக்குதல்

iv. வெளிமூலங்களிலிருந்து பணிகளை பெறும் வகையிலமைந்த ஆங்கில மொழியில் புலமையை கொண்டிருத்தல்

v. நவீன பணிகள், கைத்தொழில்களிலான மனித மூலதன இடைவெளிகளை நிரப்புவதற்கு உலக தரத்திலான மூன்றாம் நிலைக் கல்வியை வழங்கல். இதற்கு தனியார் துறைக்கு கூடிய வாய்ப்பளித்தல்

vi. உள்நாட்டு மூன்றாம் நிலைக்கல்வியை வழங்க பிரபலமான பல்கலைக்கழகங்களுக்கு திறந்து விடல்

vii. அரச கல்வி நிறுவனங்களிடையே போட்டியை பேணுதல்.

viii. அரச - தனியார் பங்குடமைக் கல்விக்கான நுழைவை ஊக்கப்படுத்து வதற்கும் இதன்மூலம் போட்டியை ஏற்படுத்துவதற்கும் வாய்ப்பளித்தல்

ix. பொருத்தமான ஊக்குவிப்புக்களை வழங்கி மூளைசாலிகள் வெளியேற்றத்தை தடுத்தல்

x. தேர்ச்சியை மேம்படுத்துவதற்கான ஏனைய விருப்பத்தேர்வுகள், ஓய்வு பெறும் வயதை உயர்த்துதல், ஓய்வு பெற்ற பின்னரும் வயது வந்த தொழில்சார் நிபுணர்களை தொழிற்படையில் தக்க வைத்தல், பயிற்சியை வழங்கல் அதற்காக ஊக்குவிப்புக்களை வழங்குதல்

இலங்கையில் உயர் கல்வி முறையின் இயலளவை அதிகரிக்கும் நோக்குடனும் தரமான உயர்கல்விப் பணிகளை வழங்கும் குறிக்கோளுடனும் உலகவங்கியின் இருபத் தோராவது நூற்றாண்டு செயற்றிட்டத்தை (2011 - 2016) நாடைமுறைபடுத்தல் பல்கலைக் கழக உட்கட்டமைப்பை மேம்படுத்தல், உலகத் தரம் வாய்ந்த உள்நாட்டுப் பல்கலைக் கழகங்களை உருவாக்குதல், உலகத்தரம் வாய்ந்த வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்கள், அறிவுநகரங்கள், பல்கலைக்கழக நகரங்களை உருவாக்குதல், ஆங்கிலத்தை வாழ்க் கைகக்குரிய தேர்ச்சியாக உருவாக்குதல் கிராமிய மற்றும் , நகர்ப்புறம் சார் குடித் தொகைக்கு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் பணிகளைப் பரப்புவதற்கான அறிவு நிலையங்களை உருவாக்குதல் போன்றவை மனிதமூல விருத்திக்கான செயற்றிட்டங்களாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.



# பெற்றோர் ஓர் ஆலயம்

யாதவானந்தன் பிரணவன்
தரம் 7B

"ஈன்றோடு எண்ணக் கடவுளும் இல்"

என்கிறது நான் மணிக்கடிகை எம்மைப் பெற்ற தாயை விடக் கடவுளும் மேலானாவர் இல்லை. எனவே தான், பெற்ற தாயும் பிறந்த பொன் நாடும் நற்ற வானிலும் நனி சிறந்தனவே என்கின்றார்கள். எம் கண்கண்ட தெய்வங்கள் அவர்கள் பத்து மாதம் தம் கருவறையில் எம்மைச் சுமந்தவள் எம் தாய் எமக்காக தன் உடல் பொருள் அனைத்தையும் அற்பணம் செய்தவர். எம் தந்தை காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு என்பது போல எல்லாப் பெற்றோர்க்கும் தத்தம் குழந்தைகளே மிக உயர்ந்த செல்வம் அச்செல்வங்களின் வருங்காலம் தம்மை விட மேலானதாக இருக்கவேண்டும் என்று அல்லும் பகலும் நாளும் பொழுதும் வருந்தி உழைத்து கனவு காண்கின்றார்கள்.

பெற்றார் காண்கின்ற கனாக்களைப் பல பொழுதுபோக்கு சாதனங்கள் சிதைத்து விடுகின்றன. பெற்றோரும் தம் பிள்ளைகளில் கொண்ட அதீத அன்பால் பலமுறையாக தண்டித்து வழிகாட்டுவதும் இல்லை. இதனால் சின்னஞ்சிறார்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையும் கணனியையும் பார்த்துச்சீரழிந்து போகின்றார்கள் இருபத்திநான்கு மணிநேரமும் நடக்கின்ற தொலைக்காட்சியை குழந்தைகள் பார்த்துக்கெட்டு விடு கின்றனர். "எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே" குழந்தைகள் அன்னையிடம் அன்பையும் தந்தையிடம் அறிவையும் பெற்று குரு மூலம் தம் இலட்சியத்தை அடைய வேண்டும். குடும்பம், சமூகம், பாடசாலை இம் மூன்றும் சேர்ந்து உருவாக்குவதே நல்லதொரு சமுதாயம் இவ்வாறு வாழுகின்ற குழந்தைகள் தம்மை ஈன்ற தாய் தந்தை யின் பெயரைப் புகழோடு நிலைநாட்டுவார்கள். தம்மில் தம் மக்கள் அறிவுடமை கண்டு அவர்கள் பேரானந்தம் அடைவார்கள்.

தொட்ல் பழக்கம் சுடுகாடு வரை என்பது போல நம் குழந்தைகள் எதிர்காலம் பற்றிக் கனாக்காண்பதோடு மட்டும் பெற்றோர் நின்று விடாது அவர்களை நன்றாக வளர்த்து பேணிப்பாதுகாத்து பண்புள்ளவர்களாக மாற்ற முன்வரவேண்டும் சமய நம்பிக்கைகளை வளர்த்தல், வைகறைத் துயிலெழுதல், வீட்டில் வெள்ளிக்கிழமை போன்ற நன்நாட்களில் கோலமிட்டு விளக்கேற்றி புனிதமாக வைத்திருத்தல், வீட்டில் பெற்றோரைப் பாதுகாத்தல், உறவினர்களோடு அன்புடனும் பண்புடனும் உண்மை யாகவும் பழகுதல் இவற்றைப் பெற்றோர்கள் சிறப்பாகச் செய்கின்றபோது குழந்தை களும் அவர்களைப் பார்த்து தாமும் செய்ய முயல்வர் இதையே பாரதிதாசன் "அறமி தென்றும் யாம் மறமிதென்றும் யாம் அருகிலாத போது" இறைவனாரின் திருக்குறளில் ஒரு சொல் இயம்பிக் கட்டுவார்கள்" இவ்வாறு உருவாகின்ற குடும்பம் நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் போன்ற பெயரும் புகழும் பெறும்.



# தாஜ்மஹால் உருவாக்கம்

நவரத்தினராசா தனுசன்
கலைப்பிரிவு 2015 A/L

ஷாஜஹான் தன் காதலிக்காக கட்டிய மகாபெரும் மாளிகை தான் தாஜ்மஹால்.

மும்தாஜ் பேகம் பாரத நாட்டு உத்தமிப் பெண்களின் வரிசையிலே என்று புகழோடு விளங்கும் ஓர் உத்தமி. அவ்வுத்தமியைக் காதலித்த அரசனும் நிகரற்றவனே. அவன் உள்ளக் கோவிலிலே குடிகொண்ட காதல் தெய்வத்தின் இருப்பிடமே தாஜ்மஹால். உலகிலே ஒப்புயர்வற்று விளங்குவதும் பாரத நாட்டின் சிறப்புக் கலைக்குச் சிகரமாக விளங்குவது தாஜ்மஹால்.

மொகலாயப் பேரரசு சீரும் சிறப்பும் பேரும் புகழும் அடைந்திருந்த அக் காலத்தில் நாடெங்கும் அமைதி நிலவியது. மொகலாயரின் நிதிசாலையில் பொன்னும் வெள்ளியும் குவிந்திருந்தன. அப்பேரரசின் குடிமகன் யாவரும் இறந்துபோன மகா ராணியின் குணநலன்களைப் புகழ்ந்து கண்ணீர் வடித்தனர். ஷாஜஹான் உள்ளத்தில் நாளுக்கு நாள் வளர்ந்தோங்கி காதலுக்கு ஒரு மாளிகை கட்டினால் நாட்டிலே வாழ்ந்த மக்கள் யாவரும் அதனை முழுமனத்துடன் ஆதரித்து உதவி புரிவர் என நினைத்தார்.

சிஸ்தாத் இஸா என்னும் பெயருடைய புகழ்பெற்ற சிற்பி ஒருவன் கான்ஸ்டாண்டி நோபிளில் இருந்து வயிற்றுப்பிழைப்பிற்காகப் பாரதநாட்டை நாடி வந்தான். இவன் சலவைகற்கள் அழகிய கோரிகள மசூரிகள், மாளிகைகள் முதலிய வற்றைச் சிறுவர் விளையாடும் சிறிய அளவில் கூடையில் வைத்து விற்றுப்பிழைத்து வந்தான். ஒரு நாள் அரசன் இவன் செய்த சலவைக் கற்பதுமைகளின் நடுவிலிருந்து கோரி ஒன்றைக் கண்டான். மிகவும் சிறிதாக அமைந்திருந்த அந்தச் சலவைக்கற் கட்டடமே அவர் உள்ளத்தில் நெடுங்காலமாகக் குடிகொண்டு வளர்த்து வந்த காதலின் படமாக அரசனுக்குத் தோன்றியது. உடனே அரசன் அச் சிற்பியை நோக்கி இதைப்போல் ஒரு பெரிய கட்டடம் அமைக்க வேண்டி அளவுத் திட்டங்கள் எல்லாம் வரையறுத்துக் கட்டடம் அமைக்க வேண்டிய அளவுத் திட்டங்கள் எல்லாம் வரையறுத்துக் காட்டக்கூடிய ஒரு படம் வரைந்து கொடுக்க இயலுமா என கேட்டான்.

உணர்ச்சி மிகுந்த அச்சிற்பி மறுமொழி ஒன்றும் கூறாமல் கையிலுள்ள தூரிகையால் தரையிலே பெரியதொரு படத்தை வரைந்து காட்டினான். அதன் ஒவ்வொரு பாகத்தின் அளவையும், அற்குரிய திட்டங்களையும் குறித்துக்காட்டினான். ஷஜஹான் பெரும் வியப்புற்று தமது காதற்கருத்து உருக்கொண்டதென எண்ணி மகிழ்ந்தார். உடனே அச்சிற்பியிடம் மாதிரி கட்டிடம் ஒன்று அமைத்து அக்கட்டிடத்தின் முழுப்படம் ஒன்று வரைந்து கொண்டு வருமாற ஆணையிட்டார்.

அரசன் குறித்திருந்த நாளில் படமும் மாதிரக் கட்டிடமும் வந்து சேர்ந்தன. அவற்றைக் கண்டு மட்டற்ற மகிழ்ச்சியுற்ற மன்னன் அச்சிற்பிகளின் மகனான முகமத் இஸாஅபண்டி என்பவனைச சிற்பிகளின் தலைவனாகவும் பாக்தாதிலே இருந்து வந்த முகமது ஹெனிப் என்பவனை கொத்தர தலைவனாகவும் நியமித்தார்.

பாக்தாத், டில்லி, பூட்டான் என்னும் இடங்களிலிருந்து கைதேர்ந்த கொத்தர்கள் பலர் வந்தனர். துருக்கி மார்க்கத்திலிருந்து விமானவேளையில் (கூரையமைப்பு வேலையில்) கைதேர்ந்தவர்கள் வந்தனர். வர்ணவேலை செய்பவர் பாக்த்தாத்திலிருந்து சித்திர எழுத்துக்களை வெட்டுவதில் சிறந்தவர்கள் வழிரோஜிலிருந்தும் வந்தனர்.

ஷாஜஹான் இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் மத்திய ஆரியாவிலிருந்தும் கட்டிடத்திற்கு தேவையான பல பொருட்களைத் திரட்டிவர ஆட்களை அனுப்பினான். ஜெயப்பூரிலிருந்து சலவைக் கற்களும் பஞ்சாபிலிருந்து சூரிய காந்தக் கற்களும், கருநீலக் கற்களும் வந்து சேர்ந்தன. திபெத்திலிருந்து மரகத கற்களும் இலங்கையிலிருந்து வைடூரியமும், இந்திர நீலக்கற்களும் அராபிய தேசத்திலிருந்து கோமேதங்களும் செவ்வந்திக் கற்களும் வந்து குவிந்தன.

இவற்றைக் கொண்டு இருபதினாயிரம் மனிதர்களின் அரும் முயற்சியில் பதினேழுஆண்டுகளில் உருவடைந்தது இம் மாளிகை.

நன்றி.

- நானே பெரியவன், நானே சிறந்தவன் என்ற அகந்தையைவிடுங்கள்
- அர்த்தமில்லாமலும், தேவையில்லாமலும், பின்விளைவு அறியாமலும் பேசிக்கொண்டே இருப்பதை விடுங்கள்
- எந்த விஷயத்தையும் பிரச்சினையையும் நாசுக்காக கையாளுங்கள், விட்டுக் கொடுங்கள்
- சில நேரங்களில் சில சங்கடங்களைச் சந்தித்துதான் ஆக வேண்டும் என்று உணருங்கள்
- நீங்கள் சொன்னதே சரி, செய்ததே சரி என்று கடைசிவரை வாதாடாதீர்கள்.
- உண்மை எது, பொய் எது என்று என்று விசாரிக்காமல் இங்கே கேட்டதை அங்கே சொல்வதையும் அங்கே கேட்டதை இங்கே சொல்வதையும் விடுங்கள்.
- மற்றவர்களை விட உங்களையே எப்போதும் உயர்த்தி நினைத்து கர்வப் படாதீர்கள்
- அளவுக்கதிகமாய், தேவைக்கதிகமாய் ஆசைப்படாதீர்கள்.

# மாணவத் தலைவர்கள் - 2013



இடமிருந்து வலமாக இருப்பவர்கள்.

திருமதி.வ. அருளானந்தம், திருமதி. அ. சற்குணசிங்கம், திரு.ச.திரவியராசா (அதிபர்) திரு.க.குநேசன், திரு.வ.கருணாமூர்த்தி

இடமிருந்து வலமாக நிற்பவர்கள்

செல்வன் ந. நந்தகோபால், செல்வன் ச.செந்தூரன், செல்வன் ச. கிருஷாந் செல்வன் வை. ஜசிந்தன், செல்வன் மை. இரா. லக்ஷன் செல்வன் சு. சுவரணராஜ் (சிரேஸ்ட மாணவத்தலைவன்) செல்வன் வெ. ஜனார்த்தனன், செல்வன் வெ. பிரகஷ்பதி, செல்வன் கி. கௌசிகன், செல்வன் சோ. நாகசாந்தன், செல்வன் ஜெ. சஞ்சீவன், செல்வன் க. பிரசாந்தன்.

GraphicPanic.com

# மாகாணமட்டத்தில் வெற்றிபெற்று தேசியமட்டம் சென்றோர்



இ.ஆழிக்குமரன்
வயது 17 கராத்தே
மாகாணமட்டம் 1ம் இடம்.



பா.மதுசுதன்
65-70 கிலோ பளு தூக்கல்
மாகாணமட்டம் 1ம் இடம்



கி.டிலக்ஷன்
Ower Weight பளு தூக்கல்
மாகாணமட்டம் 3ம் இடம்.



ர.மயூரன்
வயது 21 உயரம், தட்டு
மாகாணமட்டம் - 4ம் இடம்



சு.சுவர்ணராஜ்
வயது 19 - தட்டு
மாகாண மட்டம் 4ம் இடம்.


**வயது 19**
**கபடி அணி**
**மாகாண மட்டம் 4ம் இடம்.**

GraphicPanic.com



# நட்பு

அ.பிறிஸ்ஷாந்தன்
கலைப்பிரிவு A/L 13 (2014)



எங்கெங்கோ பிறந்தோம்
பள்ளியில் இணைந்தோம்
நட்பு என்னும் குறளுக்கு
பல கருத்துக்கள் கண்டோம்
அன்பு என்னும் கயிற்றால்
கட்டப்பட்டு நாம் இருந்தோம்
தோல்வியின் போது தோள் கொடுத்தாய் நீ
தனியாக தவித்த பொழுது
தாயாக வந்த உறவும் நீ
தலை சாய்ந்து உறங்க மடிதந்ததும் நீ
நட்பு என்னும் தோட்டத்தில் பூத்திருந்தோம்
பிரிவு என்னும் வெய்யிலினால் வாடினோம்
கல்லூரி விட்டு பிரிந்தாலும் - என்
நட்பை விட்டு பிரிவதில்லை
மீண்டும் ஒரு கருவில்
நான் பிறப்பேன்
உன் நண்பனாய்
நான் வருவேன
மேகமதில் துளியாவேன்
நட்பு தோட்டத்திற்கு
மழையாய் ஆவேன்.



# இந்திய ஓவியமும் அஜந்தா குகைகள் பற்றிய தகவல்களும்

க.ராகுராம்
கலைப்பிரிவு A/L 2015

அஜந்த குகைகள் இந்தியாவின் மகராஷ்திரா மாநிலத்தில் (முன்னாள் ஜதரா பாத் சமஸ்தானத்தில்) ஔரங்கபாத் எனும் இடத்தில் இருந்து 65 மைல் தூரத்தில் அமைந் துள்ளது. மலையின் அடிவாரத்தில் பிறைச்சந்திர வடிவத்தில் 29 குகைகள் வெட்டப் பட்டு காணப்படுகின்றன. இக்குகைகள் கி.மு.2ம் நூற்றாண்டிலிருந்து கி.பி.7ம் நூற்றாண்டு வரையான காலத்தில் வெட்டப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. காலத்தின் அடிப்படையில் நோக்கும்போது 8,9,10,12,13ம் குகைகள் கி.மு 200ம் ஆண்டளவில் வெட்டப்பட்டவையாகும். 10 ஆவது குகையே மிகவும் பழமையானது. 6,7, 11 ஆம் இலக்க குகைகள் கி.பி. 450 - கி.பி 500 ஆம் ஆண்டளவில் வெட்டப்பட்டவையாகும். 15,16,17,18,19.20,21,22,23,24,25,26ம் இலக்க குகைகள் கி.பி. 6ம் நூற்றாண்டுக்கு இடைப் பட்டவை ஆகும். 1,2,3, 4, 5ம் இலக்க குகைகள் கி.பி. 6-7 ஆம் நூற்றாண்டிற்கு இடைப் பட்டவை ஆகும்.

இக்குகைகளில் பௌத்தசமயம் சம்மந்தமான ஜாதக்கதைகள் புத்தரின் வரலாற்று நிகழ்வுகள் போன்றவை ஓவியங்களாக வரையப்பட்டுள்ளன. ஈரச்சுதை, உலர்ச்சுதை ஆகியன இருமுறைகளிலும் ரேகைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும். கீழைத்தேச பாணியில் ஓவியங்கள் வைரயப்பட்டுள்ளன. நீண்ட விரல்கள் ஒடுங்கிய இடை காதளவிற்கு நீண்ட கண்கள் போன்றவை இவ் ஓவியங்களில் சிறப்பியல்பாகும்.

செங்காபி, மஞ்சள் காவி, புகைக்கறுப்பு நீலம், வெள்ளை வர்ணங்கள் அதிகளவில் பாவிக்கப்பட்டுள்ளன. 1ம் குகையில் தர்மசக்கர முத்திரையுடனான புத்தர் சிலை ஒன்றும் உள்ளது. மற்றும் புத்தரின் வரலாற்று வாழ்க்கைச் சம்பவங்களான புத்த ரும் மனைவியும் அமைந்த காட்சி புத்தர் தவம் செய்யும்போது மாறன் என்பவர் தன்னு டைய இளம் புதல்வியர்களை அனுப்பி மேனியழகை காட்டி புத்தரை மயக்க முயலும் காட்சி நந்தன் துறவு பூணல், புத்தர் பல்வேறு மாய உருவங்களில் காட்சி அளித்தல் மற் றும் சிவி ஜாதகம் போன்றனவும் வரையப்பட்டுள்ளன. பின்னணியில் பரிவாரங்கள், மாந்தர்கள், தேவர்கள் அசோக கமுகு மரங்களில் குரங்குள் குதித்து விளையாடல் ஆண், பெண் மயில்களின் காத்தற்காட்சிகள் போன்றனவும் காணப்படுகின்றன.

1வது குகையில் காணப்படும் பூநூல், காதணி தலையில் உயரமான கிரீடம் அணிந்து தாமரைப்பூவுடன் திரிபங்கநிலையில் காணப்படும் புத்தர் உருவம் மிகச் சிறந்த ஓவியமாக கொள்ளப்படுகின்றது. இவ் ஓவியத்தின் மென்மையான வர்ணங்கள் பாவிக்கப்பட்டுள்ளன. லயம், நளினம் முப்பரிமாணத்தன்மை கொண்டதாக வரையப் பட்டள்ளது. இக்குகையில் போதிசத்துவ விஜ்ஜிரபாணி எனப்படும் ஓவியமும் காணப்படுகின்றது.



# நாளும் அகதியாய்

தில்லையம்பலம் செந்தூரன்
தரம் - 9A

அகதி வாழ்க்கை வாழ்ந்து
அலுத்துப்போய்விட்ட எமக்குள் அச்சம்
அடுத்து வரும் ஆண்டிலும் அகதியாவோமா என!

குண்டுவீச்சினதும் துப்பாக்கி வேட்டினதும்
இரைச்சல் கேட்டு ஓய்ந்து போன என் காதுகளும்
அங்கும் இங்கும் ஓடி ஓடி அலுத்துப்போன என் கால்களும்
அருகில் நின்ற ஆருயிர் நண்பன்
அமரத்துவம் அடைந்ததைப் பார்த்த
என் கண்களும்
தினமும் அஞ்சுகின்றன!
அடைக்கலம் நாடி அகதி முகாமிற்குள்
அடைக்கப்பட்டிருந்ததையும்,
தினமும் காலையில் கால்நோக வரிசையில்
நின்றால் தான் கால்முகம் கழுவமுடியும்.
கால்வாசி வயிறு காலைச்சாப்பாட்டால்
நிரப்பினாலும் கலங்கவில்லை. நாம்.
கால் நீட்டிப் படுப்பதற்கே இடம் இல்லாமல்
இருந்ததையும் நினைக்கின்றேன்.
தினமும் என் மனதில்!
இவை எல்லாம் எமக்கு மாறாத
**வடுக்களாக மாற்றாது இருந்தாலும் மனித**
**வாழ்க்கையில்**
**இனியும் வருமா?**
**இந்த பாடசாலையிலாவது?**
**வசந்த காலம் கிடைக்குமா? நமக்கு**





# தமிழ் தாயே நீ எங்கிருக்கிறாய்?

செல்வி V. செம்மனச்செல்வி
பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியர்



ஞாலமெலாம் போற்றுகின்ற தேவதையே!
காலமெலாம் கலைத்திருந்த காவியமே!
சீலமெலாம் நிறைந்த தமிழ்ச்செல்வியே
சோலமெலாம் அமிழ்ந்து நீ ஏங்கிருக்கிறாய்?

வள்ளுவன் ஏற்றி வைத்த தீச்சுடரே!
கம்பன் காதலித்த தேன்மொழியே
இளங்கோ பாடிவைத்த காவியமே!
இன்று நீ ஏன் ஏங்குகின்றாய்?

முடியுடை மன்னர் சிரமேல் தாங்கினர்
முக்கோடி தேவர் சிரமேல் தாக்கினர்
அகத்திய முனிவன் தொன்மையை ஏற்றினார்
அழிலென்பதில்லாத அருஞ்செல்வமே எங்கிருக்கிறாய்

கற்புடைச் செல்வி கண்ணகியைப் பெற்றவளே
பொற்புடை மாது ஔவையை அரவணைத்தாயோ
அற்புதமாய் உன் மேனிகாத்த அரசரெங்கே
பாரதி முழக்கமிட்ட வீரத்திருமகளே.



# நல்லகேள்வி! நல்ல பதில்

செல்வன் இராசரத்தினம் முகுந்தவாசன்
கலைப்பிரிவு 12 (2015 A.L)

## 1) தத்துவம்

### i. கேள்விக்கு கேள்வி

முன்னொரு காலத்தில் அரவன் ஒருவன் அறிஞர்களை பார்த்து, "செல்வச்செழிப்பிலோ அல்லது கொடைத்தன்மையிலோ எனக்கு இணையான வேறோர் அரசனைப் பார்த்தது உணடா?" என்று தற் பெருமையோடு கேட்டான்.

"அரசே எங்களைப் பாரத்து மிகவும் கனமான ஒரு கேள்வியைக் கேட்டுவிட்டீர்கள். அதற்கு பதில் அளிப்பதற்கு முன் என் ஐயத்தை தீர்த்து வையுங்கள். உங்களது செல்வச்செழிப்பு நிலையாக இருக்க கூடியதா அல்லது அழிந்து போக கூடியதா?" என்று கேட்டார் அறிஞர் ஒருவர். "அழிந்து போகக்கூடியது தான்" என்று விடையளித்தான் அரசன். "அப்படியானால் மிகவும் எளிய ஒன்றைப் பற்றி ஏன் அப்படி ஒரு கனமான கேள்வியை கேட்டீர்கள்?" என்று அரசனை மடக்கினார் அந்த அறிஞர்.

### ii. மரணம் என்றால் என்ன?

கன் பூசியசைப் பார்த்து ஒரு மாணவன், "மரணம் என்றால் என்ன? அதை விளக்காமாகச் சொல்லுங்கள்" என்று கேட்டான்.

"வாழ்க்கையைப் பற்றியே உனக்கு ஒன்றும் தெரியாதபோது மரணத்தைப் பற்றி தெரிந்து என்ன செய்ய போகிறாய்? முதல் வாழ்க்கையைப் புரிந்துகொள்" என்று பதில் தந்தார் கன்பூசியசு

## 2) கடவுள்

### i. விளக்கமுடியாத பொருள்

துறவி அகஸ்டினிடம், "கடவுளைப் பற்றிசொல்லுங்கள்" என்று சிலர் கேட்டனர். அதற்கு அவர், "கடவுளைப் பற்றி கேட்காதவரை அவரை பற்றி எனக்கு நன்றாக தெரிந்துள்ளது. ஆனால் நீங்கள் கேள்வி கேட்டவுடன் நான் குழம்பி

விடுகின்றேன். இனிமேல் என்னை இதுபோன்ற கேள்விகளை கேட்காதீர்கள் என்று வேண்டுகின்றேன். நான் கடவுளைப் பார்த்து இருக்கின்றேன். ஆனால் என்னால் அவரை உங்களுக்கு விளக்க இயலாது" என்றார்

### ii. உன்னைப் படைத்தது

பாதிரியாரைப் பார்த்து ஒருவன் " என்ன மோசமான உலகத்தை கடவுள் உருவாக்கி இருக்கிறார். இதனைவிட நல்ல உலகத்தை நான் உருவாக்குவேனே. என்ன சொல்கிறீர்?" என்று கேட்டான்.

"உனக்கே காரணம் புரிகிறது. உலகத்தை மேலும் நல்லதாகத்தான் கடவுள் உன்னைப் படைத்து இருக்கிறார். நீ சொன்னதைச் செய்ய முயற்சி செய்" என்று பதில் தந்தார் பாதிரியார்.

## 3) கல்வி

### i. அடிமைக்கு ஏன் கல்வி?

பேரறிஞர் பிளேட்டோவிடம் செல்வன் ஒருவன் வந்தான். "என் மகனுக்குக் கல்வி கற்றுத்தர எவ்வளவு கேட்கிறீர்கள்?" என்று வினாவினான்.

"ஐநூறு வெள்ளிகள்" என்றார் பிளேட்டோ.

"ஐநூறு வெள்ளிகளா? இதைவிடக் குறைந்த செலவில் ஒரு அடிமையை விலைக்கு வாங்கி விடலாமே. இவ்வளவு தொகையா உங்களுக்கு தரவேண்டும்?" என்று கேட்டான்.

"நீங்கள் சொன்னது சரிதான் இந்தத் தொகைக்கு ஒரு அடிமையையே வாங்கிக்கொள்ளுங்கள். உங்கள் மகனையும் சேரத்து இரண்டு அடிமைகள் வீட்டில இருப்பார்கள்" என்று பதில் தந்தார் பிளேட்டோ.

### ii. கல்வியும் கல்லூரியும்.

கல்லூரிகளை ஏன் அறிவுக் களஞ்சியங்கள் என்று அழைக்கின்றோம் தெரியுமோ?" என்று கேள்வி கேட்டார் அறிஞர் ஒருவர்.

யாரும் பதில் தரவில்லை.

உடனே அவர், "கல்லூரியில் சேரும் மாணவர்களை ஓரளவு அளவுடன் வருகிறார்கள். அதைவிட்டுச் செல்கின்றவர்கள் எதையுமே எடுத்துச் செல்வது இல்லை. எல்லா அறிவும் அங்கேயே தங்கிவிடுகிறது. அதனால்தான்" என்று பதில் தந்தார்.

**4) அரசு**

**i. அரசுக்கு இன்றியமையதாது.**

மாணவன் :- நல்ல அரசுக்குரிய அம்சங்கள் யாவை?

கன்பூசியசு :- மக்களுக்கு போதுமான அளவு உணவுப் பொருள்கள், போதியளவு படைப்பலம், மக்களின் நம்பிக்கை இவைதான் முக்கிய அம்சங்கள்

மாணவன் :- படை பலத்தை கைவிடலாம்

மாணவன் :- மீண்டும் ஒன்றை கைவிடுவதானால்

கண்பூசியசு :- உணவைக் கைவிடலாம். ஆனால் மக்களின் நம்பிக்கை இல்லாவிட்டால் எந்த அரசுமே நிலைத்து இருக்காது.

**ii. ஆற்றல் மிகுந்த இரண்டு**

நபிகள் நாயகம் கூட்டத்தினரை பார்த்து "உலகில் ஆற்றல் வாய்ந்த இரண்டு பொருள்கள் உள்ளன. அவை கெட்டதாக இருந்தால் உலகமும் கெட்டுவிடும். அவை என்ன தெரியுமா?" என்று கேட்டார்.

கூட்டத்தினர் விடைசொல்லமுடியாமல் தவிர்த்தனர். அதற்கு நபிகள் நாயகம் "அரசும் அறிவுமே அவை" எ்னறு விடைதந்தார்.

**5) நல்ல விளக்கம்**

**i. யார் புத்திசாலி?**

'யார் புத்திசாலி" என்று கேள்விக்கு ஆங்கில அறிஞர் பேசன், "தான் படித்த நூல் அறிவை எவன் வாழ்க்கைக்குப் பயன்படுத்துகின்றானோ அவனே புத்திசாலி" என்று பதில் தந்தார்.

**ii. மீனும் மனிதனும்.**

சேக்ஸ் பியரைப் பார்த்து ஒருவர், "இந்த மீன்கள் நீரில் எப்படி உயிர் வாழ்கின்றன என்பதை நினைத்தால் வியப்பாக இல்லையா?" என்று கேட்டார்.

> "இதில் என்ன வியப்பு இருக்கிறது? மனிதர்கள் பூமியில் வாழ்வதைப் போலத்தான் பெரியவை சிறியவற்றை விழுங்கி வாழ்கின்றன" என்று பதில் தந்தார்.

## 6) நற்பண்பு

### i. மரியாதை

ஒரு யூதனின் பிணத்தை வீதி வழியாகத் தூக்கிச் சென்று கொண்டிருந்தனர். அங்கிருந்த நபிகள் நாயகம் எழுந்து நின்று அந்த பிணத்திற்கு மரியாதை செலுத்தினார். இதை கண்ட தோழர்கள், "ஒரு யூதனின் பிணத்திற்குத் தாங்கள் மரியாதை செலுத்தலாமா?" என்று கேட்டனர். அதற்கு நபிகள் நாயகம் "எந்தப் பிணமாக இருந்தால் என்ன? அதில் நின்று நிலவும் ஆத்மா (ரூஹ்) இறைவனின் படைப்பு இல்லையா? என்று வினாவினார்.

### ii. நீண்டகாலம் வாழ

நூற்றாண்டு காலம் வாழ்ந்த ஒருவரை, "நீண்டகாலம் வாழ்வதன் ரகசியம் என்ன? என்று ஒருவர் கேட்டார்.

அதற்கு அவர், "நான் கடவுள் எனக்கு அளித்த பரிசுகளை அப்படியே பயன்படுத்துகின்றேன். இரவில் நன்றாக உறங்குகின்றேன். பகலில் கடுமையாக உழைக்கிறேன். களைப்பு அடைந்தஉடன்ஓய்வு எடுக்கிறேன்" என்று பதில் தந்தார். ●

FreePrintableBorders4u.com

**பணிவுடன் இரு**

உண்மையான ஞானம் பெறுவதற்குரிய நிபந்தனை என்னவென்றால்

- ஆரோக்கியமான பணிவுதான்.
- கடவுள் உன்னை தாங்குகிறார்.
- உன்னை பேணி வளர்க்கிறார்
- உனக்கு உதவுகிறார்
- உனக்கு அறிவு‌ட்டுகிறார்
- உனக்கு வழிகட்டுகிறார் இவ்வாறெல்லாம் அவர்தான் செய்கின்றார் என்று நம்பி நீ பணிவுடன் இரு.

# பணிவுடன் இரு

FreePrintableBorders4u.com

# பரிசளிப்பு விழாவும் வேல் ஒளி - 02 வெளியீடும் 2012




# உயர்தர மாணவர் ஒன்றுகூடல் - 2013



GraphicPanic.com

GraphicPanic.com

## ஆசிரியர் தினம் - 2013



## நவராத்திரி விழா - 2013





# சிறுவர் நாம் ஒன்றுபடுவோம்.

**சிவலிங்கம் யோகதீபன்**
**தரம் 8B**

**"ஒன்று பட்டால் உண்டு வாழ்வு"**
**"ஒற்றுமையே பலம்"**

என்பன முதுமொழிகளாகும். இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள். சிறுவர்கள் நாளைய தலைவர்கள். சிறுவரகள் நல்ல பண்புள்ளவர்களாக, ஒழுக்கமுள்ளவர்களாக, அறிவு ஆற்றல் உள்ளவர்களாக சிறுபராயத்திலேயே வழிநடத்தப்படவேண்டும். சிறுபராயத்திலிருந்தே குழு விளையாட்டுக்கள் கற்றலில் குழுச்செயற்பாடுகள் என ஒற்றுமைக்கு அடித்தளமிடப்படவேண்டும்.

ஐக்கிய நாடுகள் சிறுவர் உரிமைகள் சமவாயம் அனைத்துலக ஆவணமாக ஏற்றுக்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து பலரும் சிறுவருக்குப் பாதுகாப்பிற்கான, பங்களிப்பிற்கான, உயிர்வாழ்த்தலுக்கான அபிவிருத்திக்கான உரிமைகள் உண்டென்பதை ஏற்றுக்கொண்டுள்ளனர். 18 வயதுக்கு உட்பட்டோர் சிறுவர்கள் என ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. சிறு பராயமே அனைத்து நற்பண்புகளுக்கும் அத்திவாரம் இடவேண்டிய பருவமாகும்.

இச்சிறார்கள் மூலமாக இன, மத, சிறு வேறுபாடற்ற நற்சமூகத்தை உருவாக்கக் கூடிய சிந்தனைத் தெளிவை பாடசாலைகள், குடும்பங்கள், சமூகங்கள், போன்றவற்றில் உருவாக்கப்படவேண்டும். நாளைய சமுதாயம் சண்டைகள், பிரிவுகளற்ற நற் சமுதாயமாக உருவாக வேண்டும்.

இச்சிறுவர்களினை சிறப்பிக்கும் வகையிலேயே ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் சமவாயம் ஒக்டோபர் 01ம் திகதியை உலகெங்கும் சிறுவர் தினமாகக் கொண்டாடுகின்றது. 1959 ஆம் ஆண்டு இவ் அமையம் மூலம் சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் 10 சட்டங்கள் அமுலுக்கு கொண்டு வரப்பட்டது.

இன்று சிறுவர்களின் நலன்களை மேம்படுத்துவதற்காக அரசாங்கம் இலவசக் கல்வி, இலவச சீருடை, இலவச சமூக நலன்களை வழங்குகின்றது. இதனையும் மீறி சிறுவர்கள் கல்வி கற்காது வேலைக்கு அமர்த்தப்படும் செயல்களும் காணப்படுகின்றது.

சிறுவர்கள் துஸ்பிரயோகங்கள், போரினால், வன்முறைகளால் அநாதையாக்கப்பட்ட சிறுவர்கள் ஆதரவற்றநிலையில் காணப்படுகின்றனர். அவர்கள்

இனங்காணப்பட்ட சரியான வழியில் வழிநடத்தப்படாதுவிடின் சிறுவர் துஷ்பிரயோகங்களும், அவர்கள் வளர்ந்து சமூகவிரோதச் செயல்கள், வன்முறைகளும் பெருகிவிடும். சிறுவயதில் வேலைக்குச் செல்வபவர்கள் உடல் ரீதியாகவும், உளரீதியாகவும் பாதிக்கப்படுகின்றனர்.

எனவே சாதி, நிறம், பால், மொழி, மத வேறுபாடுகள், தேசிய, சமூக, பூர்வீகம், அந்தஸ்து என அனைத்தையும் பொருட்படுத்தாது சிறுவர் உரிமையாகிய உயிர் வாழ்தல், பாதுகாப்பு, மேம்பாடு, பாகுபாடு, காட்டாமையை கருத்திற்கொண்டு மனித நேயத்துடனும், சமத்துவத்துடனும் வாழுதல் முக்கிய விடயமாகும்.

இன்றைய சிறுவர்களுக்கு இவற்றை பெற்றோர், ஆசிரயர்கள், சமூக அலுவலர்கள் எடுத்துக்கூறி அவர்களது அறிவு ஆற்றல்கள், மனித நேயப்பண்புகளை வளர்க்கவேண்டும். இப்பண்புகளை நாளய தலைவர்களாக மாறப்போகும் சிறுவர்களுக்கு அத்திவாரமாகட்டும். சண்டைகளற்ற ஒற்றுமையான, சமாதானமான இளம் சமூகத்தை உருவாக்கி வீட்டிற்கும், சமூகத்திற்கும், பிரதேசத்திற்கும், நாட்டிற்கும் ஒற்றுமையை மலரவைப்போம்.

**“ஒற்றுமையே பலம்”**
**“ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு ”**

<u>குறைகூறுவதை நிறுத்து</u>

- நீ உபயோகப்படுத்தும் விபத்தில் பத்து நிமிடங்கள் பேசவேண்டும் என்று கருதினால் அதற்காகப் பத்து நாட்கள் மொனத்தைக் கடைப்பிடிக்கவேண்டும்.
- உன்னுடைய பேச்சிலே எவ்விதக் கட்டுப்பாடும் இல்லாமல் வெளிப்படக்கூடிய குறைகூறக்கூடிய பழக்கத்தை மாற்றிக்கொள்ளவேண்டும்.
- அவ்வாறு செய்யவேண்டுமானால் பின் வருவனவற்றைக் கடைப்பிடிக்கவேண்டும்.

1. அவ்வாறான உணர்வு நிலையில் இருக்கும்போது நீ ஒருபோதும் பேசாதே தேவை என்றால் உடல் அளவில் பேசமுடியாபடி ஆக்கிக்கொள்கின்றது.
2. உன்னையே ஆராய்ந்து பார். மற்றவர்களிடத்தில் எவை எல்லாம் சிரிப்புக்கு இடமானவையாக உனக்குத் தோன்றுகிறதோ அவை எல்லாவற்றையும் உன்னிடத்தில் இருப்பதாக அறிந்து கொள்வாயாக
3. உன்னுடைய இயற்கையிலே அதற்கு எதிரான எண்ணம் விலகி இருப்பதைக் கண்டறிந்து அந்தத் தவறான எண்ணம் விலகி, இந்த நல்ல குணம் வளர வற்புறுத்து.

# மனித உடல் பற்றி தகவல்

ஜெயசிங்கம் மதுசன்
தரம் 8 B

| | |
|---|---|
| 1. மனிதனின் சராசரிநாடித்துடிப்பு நிமிடத்திற்கு | 75 தடவை |
| 2. சராசரி வெப்பநிலை | 98.4F, 36.8°C |
| 3. மிக நீண்ட எலும்பு.................................. | தொடை எலும்பு |
| 4. மிக சிறிய எலும்பு.................................. | காதிலுள்ள எலும்பு |
| 5. எலும்பு அதிகமுள்ள பகுதி ................ | கைகள் |
| 6. எலும்புகளின் மொத்த எண்ணிக்கை | 207 |
| 7. விலா எலும்புகளின் எண்ணிக்கை | 24 |
| 8. மிக வன்மையான பகுதி | பல் மிளிரி |
| 9. மிக பெரிய உறுப்பு | கல்லீரல் |
| 10. மிக பெரிய அங்கம் | தோல் |
| 11. உயிரற்ற கலங்கள் ஆக்கப்பட்ட பகுதி | நகம், மயிர் |
| 12. முதலில் இறக்கும் பகுதி | மூளையின் கலங்கள் |
| 13. உயிரணுவில் உள்ள நிறமூர்த்தங்கள் | 23 சோடி |
| 14. குருதியின் வகை | A,B,AB,0 |
| 15. நாக்கில் உள்ள சுவை நரம்புகள் | 1000 |
| 16. மிக வலிமையான தசைப் பகுதி | நாக்கு |
| 17. மிகப் பெரிய தசை, | இதயத் தசை |
| 18. மூட்டுக்களின் எண்ணிக்கை | 230 |
| 19. பிறப்பிற்கு பின்னர் வளர்ச்சியடையாத பகுதி | கருவிழிப்படலம் |
| 20. இரத்தம் செல்லாத பகுதி | கருவிழி |
| 21. முதலில் உறங்கும் பகுதி | கண்கள் |
| 22. தசைகளின் மொத்த எண்ணிக்கை | 639 |
| 23. நரம்புகளின் மொத்த எண்ணிக்கை | 7200 |
| 24. மிகப்பெரிய இணைப்பு | முழங்கால் |
| 25. எலும்புகளின் துணையின்றி அசையும் தசை | நாக்கு |
| 26. சிந்தனை வேகம் | மணிக்கு 270km |



# இலங்கையின் மாகாணசபை முறைமை

திருமதி வ. அருளானந்தம்
B.A(Hons) (அரசியல் விஞ்ஞானம்)

இலங்கை பல்லின கலாச்சார பாரம்பரியங்களைக் கொண்ட ஒற்றையாட்சி முறை நடைமுறையிலுள்ள நிறைவேற்று ஜனாதிபதித்துவ அரசாங்க முறை செயற்படுத்தப்பட்டு வரும் ஒரு நாடாகும். இலங்கையில் வாழும் இரு பிரதான இனக் குழுக்களுக்கிடையே சுதந்திரத்திற்கு முன்பும் சுதந்திரத்திற்கு பின்பும் நிலவிவரும் பிரச்சனைகளை தீர்ப்பதற்காக பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கமைய 1931 ஆம் ஆண்டு டொனமூர் யாப்பில் பிரதேச சபைகள், மாகாணசபை கள் உருவாக்கப்படவேண்டம் எனவும், 1955 இல் சொக்சி ஆணைக்குழுவின் சிபார்சில் பிரதேச சபைகளின் உருவாக்கம் பற்றியும், 1957 இல் S.W.R.D பண்டார நாயக்கா - S.J.V செல்வநாயகத்திற்குமிடையே செய்யப்பட்ட உடன்படிக்கையில் பிரதேச சபைகள் உருவாக்கப்படவேண்டும் எனவும் 1965 இல் டட்லி சேனநாயக்காவிற்கும் S.J.V செல்வ நாயகத்திற்குமிடையே மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையில் மாவட்ட அபிவிருத்தி சபைகள் அமைக்கப்படவேண்டும் எனவும் காலத்துக்கு காலம் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் இவற்றுள் எவையும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. 1977 இல் பதவியேற்ற அரசாங்கம் 1980 களில் மாவட்ட சபைகளை உருவாக்கிய போதும் அது மிக விரைவில் செயற்படாது போய்விட்டது.

இலங்கையில் மாகாண சபைகளை அமைப்பதில் பல்வேறு காரணிகள் செல்வாக்கு செலுத்தின.

1. இலங்கையில் நீண்டகாலம் நிலவி வரும் இனப்பிரச்சனைக்கு தீர்வாக தமிழர் தலைவர்களுடனும் இந்திய அரசாங்கத்துடனும் 1984 ஆம் ஆண்டு தொடக்கம் நடைபெற்று வந்த பேச்சு வார்த்தையின் பயனாக 1987 யூலை 29 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தத்தின்படி மாகாண சபை அமைக்கப்பட்டு அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனைகள்.

2. ஆட்சிக் கருமங்களில் பிரதேச மக்களை பங்கேற்கச் செய்தல்

3. பிரதேச அபிவிருத்திச் செயற்பாடுகளைத் துரிதப்படுத்துவதும் செயற்திறனை அதிகரிப்பதும்

இத்தகைய நோக்கத்திற்கமைய 1987 இல் நவம்பர் மாதம் பாராளுமன்றத்தில்

கொண்டுவரப்பட்ட அரசியல் யாப்பின் 13 வது திருத்தச்சட்டத்திற்கு அமைய நடைமுறைக்கு வந்த அமைப்பே மாகாண சபைகளாகும்.

மாகாண சபைகளின் அமைவுச் சேர்க்கை

அரசியல் திட்டத்தின் 154 (A) சரத்தின் 1ம் பிரிவில் ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒவ்வொரு மாகாணசபை அமைக்கப்படவேண்டும் எனவும், இதே சரத்தின் 3ம் பிரிவு இரண்டு அல்லது மூன்று மாகாணங்கள் இணைந்து ஒரு மாகாண சபையை உருவாக்கலாம் எனவும் கூறப்பட்டுள்ளது. இதற்கமைய 1988 இல் இலங்கையிலுள்ள ஒன்பது மாகாணங்களில், ஏழு மாகாணத்தில் தனியான மாகாணசபைகளும், வடக்கும், கிழக்கும் இணைந்த ஒரு மாகாணசபையுமாக எட்டு மாகாண சபைகள் உருவாக்கப்பட்டன.

மாகாண சபையின் நிறைவேற்று அதிகாரத்தை பெற்றவராக ஆளுநர் செயற்படுவர். இவர் ஜனாதிபதியால் ஐந்து வருடம் பதவி வகிக்கவென நியமிக்கப்படுவர். மாகாண சபையின் முதலமைச்சரை ஆளுநர் நியமிப்பார். மாகாண சபை உறுப்பினர்களுள் அதிகப் பெரும்பான்மை நம்பிக்கை பெற்ற ஒருவரையே முதலமைச்சராக ஆளுநர் நியமனம் செய்வார். மாகாண சபையின் நிர்வாக செயற்பாட்டிற்காக நான்கு பேருக்கு மேற்படாத அமைச்சர்களைக் கொண்ட அமைச்சரவை ஒன்றும் காணப்படும். இவ் அமைச்சர்கள் முதலமைச்சரின் ஆலோசனைக்கமைய ஆளுநரால் நியமிக்கப்படுவர். மாகாண சபையின் உறுப்பனர்களின் எண்ணிக்கை அந்தந்த மாகாணங்களின் விஸ்தீரணத்துக்கும், சனத்தொகைக்கும் அமைய தீர்மானிக்கப்படுடம். இவ் உறுப்பினர்கள் விகிதாசார பிரதிநிதித்துவ முறைக்கமைய மாகாண சபைத் தேர்தல் மூலம் தெரியப்படுவர். இரு உறுப்பினர்கள் நியமிக்கப்படுவர். இந்த இரு நியமன உறுப்பினர்களை தேர்தலில் அதிகப் பெரும்பான்மை வாக்குகளைப்பெற்ற கட்சியே நியமனம் செய்யும் மாகாண சபையின் பதவிக்காலம் ஐந்து வருடங்களாகும்.

## மாகாண சபையின் அதிகாரங்களும் கடமைகளும்.

மாகாண சபை பின்பற்ற வேண்டிய நடைமுறைகளும், பொறுப்புக்களும் மூன்று அதிகார நிரல்களின் அடிப்படையில் பரவலாக்கப்பட்டுள்ளது.

1. மாகாண சபை நிரல்.:

   இதில் 37 விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

2. ஒதுக்கியை நிரல்:

   இதில் 16 விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் மத்திய அரசிற்கு உரியன.

3. ஒருங்கிய நிரல்

இதில் 36 விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. இவை மத்திய அரசிற்கும் மாகாண அரசிற்கும் பொதுவான விடயங்கள் இதில் உள்ளவற்றை மாகாண சபைக்கு ஒப்படைக்கவும் திரும்பப் பெறவும் மத்திய அரசிற்கு அதிகாரம் உண்டு.

## மாகாணசபைக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட விடயங்களில்

1. சட்டமும் ஒழுங்கும்
2. காணியும் காணியமர்வும்
3. விவசாயமும் கைத்தொழிலும்
4. கல்வியும் கலாசாரமும்

என்பன முக்கியமானவையாகும். இவற்றை விட நிதி வருவாயை பங்கீடு செய்வதற்கு ஒரு நிதி ஆணைக்குழு நிறுவப்படும். அத்துடன் ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒரு மேல் நீதிமன்றமும் நிறுவப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் மாகாண சபை முறை இனரீதியான முரண்பாட்டின் தீர்வாக முன்வைக்கப்பட்ட போதும் தமிழ் மக்களால் அதன் பலனை இருபது வருடங்களுக்கு மேலாக அனுபவிக்க முடியவில்லை. 1988 களில் உருவாக்கப்பட்ட வடக்கு கிழக்கு இணைந்த மாகாண சபை, அதனது பதவிக்காலம் முடியும் முன்னரே செயலிழந்து விட்டது. ஆனால் ஏனைய மாகாணங்களில் அது செயற்பட்டு வருகின்றது. உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக்கமைய வடக்கும், கிழக்கும் இன்று தனியான மாகாணசபை களாக உருவாக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாணசபைத் தேர்தல் இவ்வாண்டே (2013) நடைபெற்றுள்ளது. மாகாண சபைக்கு பரவலாக்கப்படும் அதிகாரங்கள் தொடர்பாக பல்வேறு அரசியல் சிக்கல்கள் வடக்கு மாகாணசபையின் ஆரம்பத்துடனேயே ஏற்பட்டுள்ளன. வடக்கு மக்களின் அரசியல் பங்களிப்பில் உருவாக்கப்பட்டுள்ள வடக்கு மாகாண சபை அம்மக்களின் எதிர்பார்ப்புக்களையும் தேவைகளையும் நிறைவேற்றுவது காலத்தின் கட்டாயமாகும்.

**<u>தனியொருவன் செய்யவேண்டியது என்ன?</u>**

- ஒருவருடைய கடந்த காலம் எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். அவன் எவ்வளவு வேண்டுமானலும் தவறுகளைச் செய்திருக்கலாம்.

- எவ்வளவு அஞ்ஞானத்தில் வேண்டுமானாலும் வாழலாம். அவனுடைய உள்ளத்தின் ஆழத்துக்குள்ளே ஒரு மிக உன்னதமான தூய்மை உள்ளது. அது அற்புதமான சித்தியாக மலர்ந்து வெளிப்படமுடியும்.



# கல்வித்திணிப்பும் திசைமாற்றமும்

செல்வன் த.சுவர்ணராஜ்

கல்விப்பின்னடைவு பாரியபொரியபிரச்சனையாக தற்போது உருவெடுத்துள் ளது. ஊலகம் விரைவாகஉருண்டோடிக்கொண்டிக்கிறது. அறிவியல் பக்கங்கள் பல உலகளாவியரீதியில் புரட்டப்படுகிறது. இந்த வேகத்திற்கு எமது எதிர்காலசந்ததி போட்டியிடமுடியாதநிலைகாணப்படுகிறது. இதற்குஎன்னகாரணம் என்று சிந்தித்துப் பார்த்தால் பலதுருவப்பிரச்சினைகள் இதற்குஅடிப்படையாகஉள்ளது.

பிரச்சினைகளிள் ஒன்றுதான் கல்வித்திணிப்பும் திசைமாற்றமும். பெற்றோர்கள் விடும் தவறாகவேஉள்ளது. தரம் 5 வரைகல்வியைபிள்ளைகள் வெறுக்குமளவிற்கு திணிப்புக்கள் மத்தியில் புலமைபரிசில் பரீட்சையில் சித்தியடையவைத்து விடுகின்றனர் புலமைபரிசில் பரீட்சையில் பிள்ளைகள் சித்தியடைந்தால் அயலவர் உறவினாகள் மத்தியில் மார்புதட்டும் பெற்றோர் சமூகம் பிள்ளைகளின் எதிர்காலவாழ்கையைத் தீர்மானிக்கும் ஜி.சீ.ஈ.சாதாரண ஜீ.சீ.ஈ.உயர்தரபிரிவுகளின் சற்றுவிலகிநிற்கின்றனர். ஏன்? இதற்கென்னகாரணம்? இலங்கையின் கல்விக் கொள்கையில் முதல்படியில் நிற்கும் ஆரம்பக் கல்விச் சுற்றுவட்டம் பல இலக்குகளைஅடிப்படையாகக் கொண்டது. அதில்விருப்புடன் கூடியகற்றல் செயலொழுங்கை அடிப்படை எண்ணக் கருவினை அடுத்த இடைநிலைக்கல்விச் சுற்றுவட்டத்திற்கு இடையூறின்றிகட்டியெழுப்பல் இதன்ஓர் இலக்காகும். இது வாழ்வியலை தீர்மானிக்கும் கல்விப்பருவமல்ல. ஆனால் அதற்கானஅடிப்படைத்திறன்களையும் ஈடுபாட்டினையும் ஏற்படுத்தும் ஒருபருவமாகும். கல்வியில் ஈடுபாட்டினையும் ஆர்வத்தையும் ஏற்படுத்தும் முக்கியமானபருவத்தில் அர்த்தமற்ற போலி கௌரவத்துக்காக பிள்ளையை பலவழிகளில் திணித்து கற்பிக்கின்றோம். இலக்கைநாம் அடைந்துவிட்டோம் என்றுகொட்டம் அடிக்கின்றனர். ஆனால் பிள்ளைகளுக்கு"பெரியபொறுப்புநிலை"கல்வியில் வந்துவிட்டது. பல தோல்விகளை சம்பாதிக்கப்போகின்றோம் என்பதைநாம் நினைக்கமறுக்கிறோம்.

சமூகம் உளநிலைக்கல்விகல்விக்குமுக்கியத்துவம் கொடுப்பது இல்லை. வேற்று நாடுகளில் பரீட்சைமையம் நிராகரிக்கப்பட்டுபலதுருவஅளவிட்டுமுறைகள் பின்பற்றப் பட்டு வருகின்றன. இதனால் தான் அபிவிருத்திப் போக்கில் பல ஆளணி வளங் களைஅவன் உருவாக்கிவருகிறான். எமதுகல்விபுலத்தில் அரசியல் புகுத்து விளையாடு கின்றது. இது யாருக்கும் புரியவில்லை. கல்விமான்களிற்குதரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைபாரியபின்விளைவுகளைஏற்படுத்துகின்றது.

ஆரம்பப்பிரிவுக்குரியதிறன் விருத்தியினைஒருபிள்ளைபூர்த்திசெய்துள்ளது. இடைநிலைக்குசெல்லதயாரனநிலையில் அதுஉள்ளதுஎன்பதைசுட்டிக்காட்டடும் வெட்டுப்புள்ளி ஒன்றும் சான்றிதழ் ஒன்றும்நடைமுறையில் உள்ளது. தாம்5 பரீட்சையில் 70 புள்ளிகளுக்குமேற்பட்டபுள்ளிகளைஎடுக்குமானால் அந்தப் பிள்ளைக்கு ஆரம்பக்கல்வி சித்தி என்ற சான்றிதழ் வழங்கப்படும்.

இது பிள்ளையின் அடைவினைத் தீர்மானிக்கப் போதுமானஒன்று. திணிப்பு அற்றரீதியில் புலமைஉள்ளவர்கள் சித்திபொறுவதற்கேபுலமைபரிசில் வெட்டுப்புள்ளி திணிப்பின் நிமிர்த்தம் தான் அதுகிடைக்குமானால் அந்தவெற்றிஅர்த்தமற்றது. இதனை ஒவ்வொருபெற்றோரும் புரிந்துகொள்ளவேண்டும்.

சலிப்புத்தன்மை அற்றஓர் கல்வி ஈடுபாட்டை எற்படுத்துவது ஆரம்பக் கல்விதிறன் விருத்தியின் ஒருகுறிக்கோளகும். ஆனால் அதற்குஎதிர்மாறாக இடைநிலை உயர்நிலைக்கல்வியைசீராகமுன்னெடுக்கமுடியாதகற்றல் வெறுப்புநிலைக்கு பிள்ளை தள்ளப்படுகின்றது.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற பல பிள்ளைகளின் ஏதிர்காலம் ஜி.சீ.ஈ. சாதாரணதர ஜி.சீ.ஈ.உயர்தரத்தில் கோள்விக்குறியாக உள்ளது. திணிப்பின் மத்தியிலேனும் உயர் வெட்டுப்புள்ளிக்கு உட்பட்டு தரம் 5 சித்தி பெற்ற பிள்ளைகளின் சிலர் ஜி.சீ.ஈ. சாதாரண ஜி.சீ.ஈ.உயர்தரசித்சிபெறமுடியவில்லை? இதற்கென்னகாரணம் என்றுநோக்கினால் பிஞ்சுமனங்களின் ஊன்றப்பட்டகல்விவெறுப்புணர்வேயாகும்.

பெற்றோருக்குதரம் 5 வரை பாடத்திட்டஉள்ளடக்கம் சற்றுதெரியுமென்பதால் பலிக்கடாக்களாவதுபிள்ளைகளே. பாடம் தெரியும் வரை பிள்ளைகளை வதைத்து விட்டு தரம் 6 இற்குபின் படிப்படியாக கைவிடஆரம்பித்துவிடுவார்கள்

எதிர்காலவாழ்வியலைத் திர்மானிக்கின்ற கல்விப்பருவம்களில் பெற்றோரைப் பிள்ளைகள் மிஞ்சிவிடுவார்கள். பாடம் தெரியாதுவிட்டாலும்கற்றல் முறைகளை வழிகாட்டிசுயகற்றலைஊக்குவிக்கும் தன்மைபெற்றோரிடம் இல்லை. பிரத்தியேகக் கல்வி நிறுவனங்களுக்கும் பாடசாலைகளுக்கும் பிள்ளைகளைஅனுப்பிவைப்பதுடன் தம் கடமைமுடிவதாகநினைக்கின்றனர். இவ்விருசெயற்பாடுகளால் முன்னேற்றம் கிடைக்கவில்லைஎனஆராயமாட்டார்கள்.

சுயகற்றல் எவ்வாறுமேற்கொள்ளப்படுகிறது? பயிற்சிகளைப் பிள்ளைகள் மேற் கொள்கின்றதா? உள்வாங்கல் முறைகளில் உள்ளகுறைபாடுகள் எவை? புள்ளி பகுப் பாய்வுகள் என்னபதில் சொல்கின்றன. இதனைஎல்லாம் ஏன் நாம் உயர்வகுப்புகளில் அவதானிக்கமறுக்கிறோம். பிள்ளைகளின் எதிர்காலவாழ்வியலைத்தீர்மானிக்கும் கல்வி யில் கவனம் செலுத்திஅவர்களின் எதிர்காலம் சிறக்கபாடுபடுவோம்.


வேல் ஒலி சஞ்சிகை சிறக்க வாழ்த்துகின்றோம்
HNB
வெளிநாட்டு
நாணய அதிர்ஷ்டம்.!!!
வெளிநாட்டு பணத்தினைப் பெற்று
HNB பரிசுகளை பெற்றிடுங்கள்!!!
விசேட காலங்களில் விசேட பரிசில்கள்
HNB cash Xpress
MoneyGram. bringing you closer
Ria
Sigue
XPRESS MONEY

உலகிலுள்ள மிகச்சிறந்த 1000 வங்கிகளில்
ஒன்றாக தொடர்ந்து மூன்றாவது
வருடமாக தெரிவு செய்யப்பட்ட
இலங்கையிலுள்ள ஒரேயொரு வங்கி

The Banker
TOP 1000
WORLD BANKS 2013



*வேல் ஒலி சஞ்சிகை சிறக்க வாழ்த்துகின்றோம்*

எமது சீரான சேவையை மீண்டும் உறுதி செய்யும் வகையில் தொடர்ந்து மூன்றாவது வருடமாக உலகிலுள்ள மிகச்சிறந்த 1000 வங்கிகளுள் ஒன்றாக தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளோம்.

இலங்கையில் அதிக
விருதுகளை வென்ற வங்கி

COMMERCIAL BANK

வேல் ஒலி சஞ்சிகை சிறக்க வாழ்த்துகின்றோம்






## வேல் ஒலி சஞ்சிகை சிறக்க வாழ்த்துகின்றோம்

BOC 3G SAVINGS
செலவிலும் சேமிப்பு - அன்பார்ந்தவர்களின் பரிசு

இலங்கையில் முதன் முறையாக
வங்கி வரலாற்றில் புதிய அனுபவம்



நீங்கள் BOC டெபிட் அட்டையில் செலவழிக்கும் போது
அந்த செலவு உங்களுக்கு சேமிப்பாகுமென்றால்...
அந்த சேமிப்பு உங்களின் அன்பார்ந்தவர்களின் எதிர்கால
சேமிப்பு நலனுக்காக

உங்களின் பெற்றோர்களுக்காக **BOC சிரேஷ்ட பிரஜைகளின் கணக்கில்**, குழந்தைகளுக்காக **BOC ரண்கெகுளு கணக்கில்** அல்லது நீங்கள் விரும்பும் எந்தவொரு **BOC சேமிப்பு கணக்கில்** செலவோடு சேமிப்பையும் செய்யுங்கள்

பட்டியல் செலுத்தும் தருவாயில் ருபா 100 முதல் 1000 வரை வரும் பணத்திற்கு உங்களின் விருப்பத்திற்கேற்ப உரிய கணக்கில் வைப்பு செய்யலாம்


மேலதிக விபரங்கள் அருகில் உள்ள இலங்கை வங்கி கிளையில்

நீங்களும் இன்றே BOC 3G SAVINGS சேமிப்புக்காக பதிவு செய்யுங்கள்

மேலதிக விபரங்கள்
அருகில் இருக்கும் இலங்கை வங்கி கிளையில்
அழையுங்கள் : 011 220 4444

www.boc.lk    Fitch Rating AA+(lka)

இலங்கைவங்கி BOC தேசத்தின் வங்கியாளர்




இலங்கை வங்கியின் பெருமைமிகு 74 வது வருட பூர்த்தியை முன்னிட்டு

BOC 3G SAVINGS
செலவிலும் சேமிப்பு - அன்பார்ந்தவர்களின் பரிசு



www.boc.lk    Fitch Rating AA+(lka)

இலங்கைவங்கி BOC தேசத்தின் வங்கியாளர்



விஜயராஜா செந்தூரன் தரம் - 13 கலைப்பிரிவு



தேவராசா நிதுஜன் தரம் - 10B

# யா/வேலாயுதம் மகா வித்தியாலயம்
# பருத்தித்துறை.

## மாணவர் தொகை

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | தரம் | 6-9 | | 164 |
| 2. | தரம் | 10.11 | | 100 |
| 3. | தரம் | 11 மீள் பரீட்சாத்திகள் | | 36 |
| 4. | தரம் | 12 கணிதம் | 05 | |
| | தரம் | 12 வர்த்தகம் | 07 | 37 |
| | தரம் | 12 கலை | 25 | |
| 5. | தரம் | 13 கணிதம் | 06 | 42 |
| | தரம் | 13 வர்த்தகம் | 12 | |
| | தரம் | 13கலை | 24 | |
| | தரம் | 13 மீள்பரீட்சாத்திகள் | | 50 |
| | **மொத்த மாணவர்** | | | **429** |

**ஆசிரியர் விபரம்:-**

| | |
|---|---|
| கலைப்பட்டதாரிகள் | 08 |
| விஞ்ஞானப்பட்டதாரிகள் | 05 |
| வர்த்தகப்பட்டதாரிகள் | 03 |
| அழகியல் பட்டதாரி | - |
| பயிற்றப்பட்ட விஞ்ஞானம் | 03 |
| பயிற்றப்பட்ட கணிதம் | 01 |
| பயிற்றப்பட்ட கிறிஸ்தவம் | 01 |
| பயிற்றப்பட்ட ஆங்கிலம் | 01 |
| பயிற்றப்பட்ட கடல்வளம் | 01 |
| பயிற்றப்பட்ட சங்கீதம் | 02 |
| பயிற்றப்பட்ட சித்திரம் | 01 |
| உடற்கல்வி | 02 |
| **மொத்தம்** | **28** |

பகுதி நேர ஆங்கில ஆசிரியர் 01

## கல்விசாரா ஊழியர்கள்:-

| | |
|---|---|
| நூலக உதவியாளர் | 01 |
| சுகாதாரத் தொழிலாளர் | 01 |
| காவலாளி | 01 |

## 2013 இல் புதிதாக இணைந்த ஆசிரியர்கள்:

திரு ச. பிரபாகர்
திரு க. சண்முகதாசன்
திரு த. பார்த்தீபன்
திரு கு. தெட்சணாமூர்த்தி
திரு . இ அனிதன்
திரு க மாதீபன்

## 2013 இல் இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்கள்:

திரு. தெ. தேவதாஸ்
செல்வி. யோ. யோகாஞ்சனா
திருமதி க. கணேசமூர்த்தி
திரு சி. பிரதீபன்

| | |
|---|---|
| மாணவத் தலைவர்கள் | 14 |
| உதவி மாணவத்தலைவர்கள் | 07 |

## 1 க.பொ.த (உ/த) பரீட்சை 2012 சிறந்த பெறுபேறு

| | |
|---|---|
| வர்த்தகப்பிரிவு | |
| ஜெகதீஸ்வரன் ஜீனோத் | **A, 2B** |
| கலைப்பிரிவு | |
| கனகலிங்கம் கனகதாஸ் | **2B,C** |
| வேலாயுதம் சந்திரமோகன் | **B,C,S** |

## 2. க.பொ.த (சா/த) பரீட்சை 2012 சிறந்த பெறுபேறு

| | |
|---|---|
| பாங்சாட்சரம் ரிசந்தன் | 4A, 3B, C, S |
| லட்சுமணனன் ஜனார்த்தன் | 4A, 2B, C, 2S |
| கிறிஸ்ரியன் ஸ்ராலின் | 3A, B, 2C, S |
| நந்தகோபால் நந்தபாலன் | A, 3B, 3C, S |
| கணேசலிங்கம் பிரசாந்தன் | A, B, 3C, 3S |

## 3. பாடசாலைச்செயற்பாடு

காலைப் பிரார்த்தனை ஒலிபெருக்கி உதவியுடன் மேற்கொள்ளப்படுகின்றது. தொடர்ந்து இசையுடன் உடற்பயிற்சி நடைபெறும். அதனைத் தொடர்ந்து நற்சிந்தனை மற்றும் பத்திரிகை வாசித்தல் ஆகியன இடம் பெறும். அதனைத்தொடர்ந்து வரும் அமைதி நேரத்தில் அதிபர் சகல வகுப்புகளையும் தரிசிப்பார். வகுப்பாசிரியர்கள் வகுப்பறையில் மாணவருடன் இருப்பர். அதன் பின்னர் பாடங்கள் ஆரம்பிக்கப்படும்.

## இணைப்பாட விதானச் செயற்பாடுகள்:-

### 1. சாரணியம்.

யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற மாவட்ட திரளணியில் பங்கு பற்றி மூன்றாவது இடத்தைப் பெற்றனர்.

சாரணர் விளையாட்டுப் போட்டியில் குண்டு எறிதல், 100மீற்றர் ஓட்டம், அஞ்சல் ஓட்டம் என்பவற்றில் முதலாம் இடத்தையும் நீளம் பாய்தல், கிறிக்கெற் என்பவற்றில் இரண்டாம் இடத்தையும் பெற்றனர்.

எமது பாடசாலையின் சாரண மாணவ அணியினர் வடமராட்சியின் முக்கிய வரலாற்றுப் பிரசித்தி வாய்ந்த ஆலயங்களிலும் பொது வைபவங்களிலும் கடமை புரிந்து சமூக சேவை ஆற்றி வருகின்றனர்.

தற்போது எமது பாடசாலையில் 40 சாரண மாணவர்கள் காணப்படு கின்றனர். இவர்களில் 6 மாணவர்கள் பிரதம ஆணையாளர் விருதினையும் பெற்றுள்ளனர்.

### 2. மாணவர் மன்றம்

ஒவ்வொரு புதன்கிழமையும் அதற்குப் பொறுப்பான ஆசிரியர்களினால் சிறப்பாக நடாத்தப்பட்டு வருகின்றது .உயர்தர மாணவர்களின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வும், சிறப்பாக நடாத்தப்பட்டு வருகின்றது. கடந்த இரு வருடங்களாக மாணவர் மன்ற வெளியீடாக "வேல் ஒளி" சஞ்சிகை வெளியிடப்பட்டு வருகின்றது.

### 3. ஆராதனைகள்.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் ஆராதனை நடைபெற்று வருகின்றது. மாணவரின் நிகழ்வுகளும் ஆசிரியரின் நற்சிந்தனையும் கால ஒழுங்கின்படி நடைபெற்று வருகின்றது. அத்துடன் வருடம் தோறும் நவராத்திரி பூசையும் நாயன்மார் குருபூசையும் சிறப்பாக நடாத்தப்பட்டு வருகின்றது. நவராத்திரி காலங்களில் விசேட சொற்பொழிவுகளும் இடம் பெற்று வருகின்றன. அத்துடன் ஒளி விழா நிகழ்வும் வருடம் தோறும் நடைபெற்று வருகிறது.

### 4. பாடசாலை அபிவிருத்திச்சங்கம்

இவ்வாண்டிற்கான பாடசாலை அபிவிருத்திச்சங்க வருடாந்த பொதுக்கூட்டம் (2013-01.20)அன்று நடைபெற்றது. புதிய நிர்வாகத் தெரிவு நடைபெற்றது. பெற்றோர் விளையாட்டுப்போட்டியை சிறப்பாக நடாத்துவதற்கு பங்களிப்புச் செய்திருந்தனர். தற்போதும் பாடசாலை அபிவிருத்தியிலும், மாணவரின் கல்வி மேம்பாட்டிலும் பெற்றோரின் பங்களிப்பு குறிப்பிடும்படியாக உள்ளது.

### 5. பாடசாலை அபிவிருத்திக்குழு

அபிவிருத்திக்குழு தெரிவு செய்யப்பட்டு செயற்பட்டு வருகிறது.

### 6. கணணிக் கற்கை நிலையம்

எமது பாடசாலை மாணவர்கள் பாடசாலை நேரத்தில் பயன்படுத்தி வருகின்றனர்.

### 7. நூலகமும் ஆய்வுகூடமும்

நூலகத்திற்கென ஒரு ஆசிரியர் நியமிக்கப்பட்டு அவரின் வழிகாட்டலுடன் மாணவர்கள் நூலகத்தை பயன்படுத்தி வருகின்றனர். மாணவரின் வாசிப்பாற் றலை மேம்படுத்த சஞ்சிகைகள் பத்திரிகைகள் மேலதிக வாசிப்பிற்காக வழங்கப்பட்டுள்ளது.

## 8. முறைசாராக் கல்விப் பிரிவு

சமூகக்கற்கை நிலையமாக எமது பாடசாலை தெரிவு செய்யப்படடு பயிற்சி நெறிகள் நடைபெற்று வருகின்றன. பாடசாலையை விட்டு வெளியேறிய மாணவர்கள் பங்கு கொள்கின்றனர். இவ்வருடம் கண்காட்சியும் விற்பனையும் நடைபெறவுள்ளது. கற்கைநெறிகளை பூர்த்தி செய்த மாணவர்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டு வருகிறது.

## 9. பயிற்சி நெறிகள்

1) மனைமுகாமைத்தும்
2) கேக்வடிவமைப்பு
3) கணனிப்பயிற்சி
4) சிங்கள மொழி
5) கணிதம்

## 10. கல்வி அபிவிருத்திச் செயற்பாடுகள்

1) மாணவரின் ஒழுக்கம் வரவு சீராக கண்காணிக்கப்பட்டு வருகிறது.
2) விடுப்பில் நிற்கும் ஆசிரியரின் பாடவேளைக்குப் ஆசிரியர்கள் பதில் கடமையாற்றுகின்றனர்.
3) க.பொ.த.(சா.த) பரீட்சைப்பெறுபேற்றினை உயர்த்துவதற்கு
   i) காலை நேர விசேட வகுப்புகள் நடைபெறுகின்றன
   ii) கடந்தகால வினாவிடைப் புத்தகங்கள் பயிற்சி புத்தகங்கள் நூலகத்திற்கு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன.
   iii) மதிப்பீட்டுப் பரீட்சைகள் அலகுரீதியாக நடாத்தப்படுகின்றன.
4) மாணவரின் கற்றலுக்கான உணவு (W.F.P) ஆசிரியரின் மேற்பார்வையுடன் வகுப்புகள். 6 - 11 வரையான மாணவருக்கு வழங்கப்படுகின்றன.
5) விளையாட்டுப் பயிற்சியிலீடுபடும் மாணவருக்கு ஒரு சில வேளைகளில் சத்துணவு வழங்கப்படுகிறது.
6) வகுப்புரீதியாக மெல்லக்கற்கும் மாணவர்கள் இனங்காணப்பட்டு அவர்களுக்கு பரிகாரக்கற்பித்தல் இடம்பெற்று வருகின்றது
7) பாடசாலைக்கு நுழைவாயிலும் பெயர் வளைவும் அழகுற அமைக்கப் பட்டுள்ளது.
8) பழைய மாணவர்களின் அன்பளிப்புக்கள் போதுமான அளவு பாடசாலைக்கு கிடைகின்றுது.


ஜதுஸ் ரெயிலறிங் சென்ரர்
Jathus Tailoring Center
0776544495
நாளுக்கு நாள் மாறும்
நவீன டிசைன்களை
நவநாகரிகத்திற்கு ஏற்ப
ஆண், பெண், இருபாலாரதும்
சகல ஆடைகளையும்
தைத்துப் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய இடம்.
நவீனசந்தை,
பருத்தித்துறை.
பிரதானவீதி,
பருத்தித்துறை.

வேல் ஒலி சஞ்சிகை சிறக்க வாழ்த்துகின்றோம்

# வர்த்தகத்துறையில் 160 ஆண்டுகளுக்கு மேலாக சேவையை வழங்கிக்கொண்டிருக்கும் இலங்கையின் முதல்தர வர்த்தக சின்னம்....




# SINGER Plus

இல.374 பிரதான வீதி, பருத்தித்துறை, தொ.பே:0212263411

வேல் ஒலி சஞ்சிகை சிறக்க வாழ்த்துகின்றோம்

"சேவையால் உயரும் சமுதாயத்தை
சேர்ந்து உருவாக்குவோம்" - வாருங்கள்

# ராஜராணி சேவை இல்லம்

நடாத்தும்

## முதியோர், குழந்தைகள் நலன்புரி பேணகம்

4ம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை.

## இளையோருக்கும் முதியோருக்கும் நாம் ஆற்றும் சேவைகள்

காலை முதல் பிற்பகல் 1.00 மணி வரை பின்வரும் செயற்பாடுகள் மூலம் முதியோர்களுக்கான இலவச சேவை நிலையமாக செயல்படும்.

முதுமையின் தனிமையை போக்கி, இன்ப சூழல் மூலம் அனைவரின் அரவணைப்பு, பழைய - புதிய நண்பர் - நண்பிகள் சந்திப்பு, சமூக கலாசார பங்களிப்பு, அனுபவங்கள் அறிவுரைகள், ஆலோசனைகள் மூலம் களப்பகிர்வு.

உடற்பயிற்சி, யோகாசனம், தியானம், பயிற்சிப் பட்டறை, நோய்கள் சம்பந்தமான விழிப்புணர்வு, வைத்திய ஆலோசனைகள், மருத்துவ முகாம், யாத்திரை சுற்றுலா ஒழுங்குகள் மூலம், நோயின்றி வாழக் கற்றல்.

தினசரிப் பத்திரிகைகள் நூல்கள் உள்ளக விளையாட்டுக்கள், தொலைக்காட்சி, சிறிய வெண் திரைப்படக் காட்சிகள் மூலம் தங்களின் பொழுது போக்கை விருத்தி செய்தல்.

பிற்பகல் 5.00 மணிமுதல் 7.00 மணி வரை குழந்தைகளுக்கான கல்விச் செயற்பாடுகள் மூலம் இலவச சேவை நிலையமாக செயற்படும்.

நல்ல நோக்குடைய பழக்கவழக்கங்கள், மொழிப் பேச்சு பயன்பாடு அன்பு, பண்பு ஆகியவைகளைப் பயிற்றுவித்தல், சிறுவர்களுக்குரிய விளையாட்டுப் பொருட்கள் மூலம் அறிவுத்திறனையும், தொலைக்காட்சி, சிறிய வெண்திரைப்படக் காட்சிகள் மூலம் அவதானச் செயற்பாடுகளையும், வீடுகளில் ஏற்படுத்த முடியாத கற்றல் சூழலை ஏற்படுத்தியும், தாங்களாகவே அமர்ந்து சுயமாக கற்கும் பயிற்சியையும் வீட்டுப்பாடங்களைச் செய்வித்தும், நினைவாற்றலை விருத்தி செய்வதற்கும் உதவி புரிதல்.

உடற்பயிற்சி, யோகாசனம், தியானம், ஆகியவைகளை குழந்தைகளுக்கு ஏற்றவகையில் களப் பயிற்சி கொடுப்பது. அழிந்து போகும் பாரம்பரிய கலைகளை கற்பதற்கேற்ற வசதிகள் ஏற்படுத்தி, அதில் நாட்டமும் வைத்தல்.

## உங்கள் பங்குபற்றலும், பங்களிப்பும் வரவேற்பிற்கு உரியவை.

புதன், சனி, ஞாயிறு, நாள்களில் உங்கள் இல்லங்களில் நடைபெற இருக்கும் திருமணங்கள், திருமண வரவேற்புக்கள், பிறந்த நாட்கள், நினைவுதினங்கள், எமது மண்டபத்தில் சிறப்பாக உணவுடன் கொண்டாடலாம். இதில் சேரும் பணம் அனைத்தும் சேவை இல்லத்தின் முதியோர், இளையோரின் சேவைக்கே பயன்படுத்தப்படும்.

அன்பிலார் எல்லாம் தமக்குரியவர் அன்புடையார்
என்பும் உரியார் பிறர்க்கு

- திருக்குறள்-

# ஜெய கணேசா ஸ்ரோர்ஸ்
# JEYA GANESHA STORES

அனைத்து வகையான பலசரக்குப் பொருட்களை
மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.







*Whole Sale & Retail Dealers*

*Phone : 3282*

Veeravagu Building, Point Pedro.

*வேல் ஒலி சஞ்சிகை சிறக்க வாழ்த்துகின்றோம்*



# வாணி நகை மாடம்



## தங்கப் பவுண் நகை வியாபாரம்







நவீன அழகிய தங்கஆபரணங்களுக்கு
சிறந்த ஸ்தாபனம்





உங்கள் ஓடர் நகைகள் குறித்த தவணையில்

உத்தரவாதத்துடன் 22 கரட்டில் செய்து கொடுக்கப்படும்.



பிரதான வீதி,
பருத்தித்துறை.

T.P:0778993696

# செல்வா மோட்டோர் வேக்ஸ் சொப்

## சேவிஸ் முகவர்



வடமராட்சியின் ஏக முகவர்

HONDA



முகவர்:– நூல்நிலையவீதி, புலோலி வடகிழக்கு, பருத்தித்துறை.
(60 பாகை கிணற்றடிக்கு அருகில்)

செல்வா மோட்டோர்ஸ் வேக் சொப்
(Honda நிறுவனத்தின் வடமராட்சி ஏக முகவர்)


பதினெட்டு வருட அனுபவம் கொண்ட எமது நிறுவனமானது மோட்டார் சைக்கிள் பழுது பார்த்தல் மற்றும் சேவிஸ் சேவையினை வழங்கும் நிலையமாக விளங்குகின்றது.

*வேல் ஒலி சஞ்சிகை சிறக்க வாழ்த்துகின்றோம்*

# விக்கினேஸ்வரா ஸ்ரோர்ஸ்





பிரதானவீதி,
பருத்தித்துறை.

T.P 0779635447


சிதம்பரப்பிள்ளை
புத்தக சாலை
இலங்கை, இந்திய சஞ்சிகைகள், நாவல்கள்,
பாலர் முதல் பட்டதாரி மாணவர்கள் வரையான
பாடப்புத்தகங்கள், அலுவலக உபகரணங்கள்,
பஞ்சாங்கங்கள், வாழ்த்து மடல்கள், டயறிகள்,
விவசாய உள்ளீடுகள், கிருமி நாசினிகள்
என்பவற்றை நிதான விலைகளில்
பெற்றுக்கொள்ளலாம்.
நெல்லியடி, கரவெட்டி.
0212263223
வேல் ஒலி சஞ்சிகை சிறக்க வாழ்த்துகின்றோம்


வின்சன் றேட் சென்ரர்
பருத்தித்துறை.
பஸ்நிலையம்
அழகுசாதனப் பொருட்கள், அன்பளிப்புப் பொருட்கள்,
பாடசாலை உபகரணங்கள் மற்றும் அனைத்துப்
பொருட்களையும் பெற்றுக்கொள்ளலாம்.


வேல் ஒலி சஞ்சிகை சிறக்க வாழ்த்துகின்றோம்
நிதர்சன் கிறீம் ஹவுஸ்
எம்மிடம் தரமான ஐஸ்கிறீம்
வகைகளையும், சிற்றுண்டி
வகைகளையும் பெற்றுக்கொள்ளலாம்.
ஓடர்களுக்கும் வழங்கப்படும்
திருமண வைபவங்களுக்கு
கார் (A/C) வாடகைக்கு விடப்படும்
பஸ் நிலையம், பருத்தித்துறை.
0776214224
0773374667

வேல் ஒலி சஞ்சிகை சிறக்க வாழ்த்துகின்றோம்

# Y.P.

## Tailoring & Textiles Centre

வேல் ஒளிசஞ்சிகை வெளியீடு சிறக்க
வாழ்த்துகின்றோம்.



Y.P.



சேட், ரவுசர் துணி
வகைகளும்,
சிறுவர்களிற்கான
ரெடிமேற் ஆடைவகைகளையும்,
இன்றைய நவநாகரீக
ஆண்களுக்கான
சகலவிதமான உடைகளையும்,
பாடசாலைச்
சீருடைகளையும்
குறித்த தவணையில்
சிறந்த முறையில் தைத்துப்
பெற்றுக்கொள்ளலாம்.

பிரதானவீதி, மொத்தைக்கடைச்சந்தி, பருத்தித்துறை. T.P:0776344208

# வே.மனோகரன்

மந்திகை,
சாவகச்சேரி றோட்,
புலோலி





துவிச்சக்கரவண்டி
கட்டிடப்பொருட்கள்
மின்சார உபகரணங்கள்
பெற்றோல்மக்ஸ்
உதிரிப்பாகங்கள்
விற்பனையாளர்.



**Branch: GOPALAA**
**International Telecommunication Service**
**T.P : 070-212372 021-3277**
**070-212693 070-212958**
**Fax: 070-212372**

Note: Internet/Email service மூலம்தொடர்புகளை பெற்றுக்கொள்ளலாம்
**Email No: manoharan (Sltnet)K** **T.P: 021 2264192**

*வேல் ஒலி சஞ்சிகை சிறக்க வாழ்த்துகின்றோம்*

# தீபன் பதிப்பகம்

பிரதானவீதி,
பருத்தித்துறை.

*0776520315*

கிளை: நீதிமன்றவீதி
பருத்தித்துறை.




**General & Commercial**
**Offset Printers**

theepanoffsetprinters@gmail.com



















தீபன் பதிப்பகம், பிரதானவீதி, பருத்தித்துறை. T.P.No : 0776520315